பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்
நல்லூர் இணை நூலகம்

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 6-00

சுடர்: 12 வள்ளுவர் ஆண்டு 2027 மார்கழி 13 சனிக்கிழமை (28-12-1996) UTHAYAN A Lively National Tamil Daily கதிர்: 32

# யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வர இந்திய அரசின் உதவி நாடப்படும்!

## தேவகௌடாவுடன் சந்திரிகா பேசுவார்

புதுடில்லி, டிசம்பர் 28

இலங்கையில் நடைபெறுகின்ற இனப் போரை முடிவுக்குக் கொண்டு வருவதற்கு இந்தியாவின் உதவியை நாடுவதே அந் நாட்டு ஜனாதிபதியின் இந்திய விஜயத்தின் பிரதான நோக்கம்.

தமது நாட்டில் மிகவும் நெருக்கடியைக் கொடுத்துவரும் போரை நிறுத்துவதில், சாத்தியமான விதத்தில், இந்தியா எவ்வாறு உதவ முடியும்; இந்திய அரசு அதற்குத் தயாராக உள்ளதா; அவ்வாறாயின் அதன் நிபந்தனைகள் என்னவாக இருக்கும்? — என்பனவற்றைக் கண்டறிவதற்காகவே ஜனாதிபதி சந்திரிகா இந்தியாவுக்கு வந்துள்ளார்

அடுத்த வார ஆரம்பத்தில் இந்தியப் பிரதமர் தேவகௌடாவுடன் நடத்தவிருக்கும் பேச்சுக்களின் போது, போரை முடிவுக்குக் கொண்டு வர சாத்தியமான விதத்தில் எவ்வாறு உதவ முடியும் என்பதனை சந்திரிகா நேருக்கு நேர் கேட்டறிவார் — என்று

(8 ஆம் பக்கம் பார்க்க)

முச்சந்தி முரளி



காலில் விழுந்தவை யெல்லாம் காலை வாரிவிட்ட நிலையில் அம்மாவுக்குச் சோதனை மேல் சோதனை தான் பாருங்கோ!

## பெருமாள் - சந்திரிகா சந்திப்பு ராஜஸ்தானில்இடம்பெறலாம்

இந்திய மாநிலமான ராஜஸ்தானுக்கு வருகை தந்துள்ள இலங்கை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க வடக்கு - கிழக்கு மாகாண சபை முன்னாள் முதலமைச்சர் வரதராஜப்பெருமாளைச் சந்திக்கக்கூடும்.

இப்படி இந்தியாவில் இருந்து வெளிவரும் 'இந்து' பத்திரிகை தலைப்புச் செய்தி வெளியிட்டுள்ளது.

அடையாளம் குறிப்பிடப் படாத ஓர் இடத்தில் இந்த இருவருக்கும் இடையிலான சந்திப்பு இடம்பெறலாம் என்றும் —

இது தொடர்பாக இந்திய - இலங்கை அதிகாரிகள் கருத்து எதுவும் இதுவரை கூறவில்லை என்றும் — அச் செய்தியில் மேலும் கூறப்பட்டுள்ளது.

1990 முற்பகுதியில் இந்தியப் படைகள் இலங்கையில் இருந்து வெளியேறியபோது வரதராஜப்பெருமாளும் இந்தியா சென்றது தெரிந்ததே.

இந்திய அரசாங்கத்தின் பாதுகாப்புடன் அவர் ராஜஸ்தான் மாநிலத்தில் தற்போது தங்கியுள்ளார்.

(இ-150-3)

## கிழக்குக்கு தரைவழிப் பாதைதிறக்க புலிகள் திட்டமிட்டு வருகின்றனராம்

வடக்குக்கு தரைப்பாதையைத்திறக்க படையினர் திட்டமிட்டு செயற்படும் அதே வேளையில் வடக்குக்கும் - கிழக்குக்கும் இடையில் பாதுகாப்பான தரைவழிப்பாதை ஒன்றைத் திறக்க விடுதலைப் புலிகள் திட்டமிட்டு செயற்படுகின்றார்கள்.

இப்படி கொழும்பு தமிழ் வார இதழ் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

கிழக்கில் தீவிர தாக்குதல்களை முடுக்கி விட்டுள்ள புலிகள் கடல் வழியாகவே தமது விநியோகங்களை தற்போது மேற்கொண்டு வருகின்றனர்.

கடந்த அரசாங்கத்தால் அமைக்கப்பட்ட வெலி ஓயா குடியேற்றம், வெலி ஓயா முகாம்கள் தரைவழிப் பாதை திறக்கும் புலிகளின் திட்டத்துக்கு தடையாக உள்ளன.

இதனை முறியடிப்பதற்காக வெலி ஓயாப் பகுதியில் புலிகள் தமது தாக்குதல்களை தீவிரமாக்கியுள்ளனர்.

அங்கு பாரிய தாக்குதல்களை புலிகள் நடத்தலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

இப்படி அந்தப்பத்திரிகை மேலும் தெரிவித்தது.

## வெல்லாவெளியில் புலிகள் தாக்குதல்!

கொழும்பு, டிச. 28

வெல்லாவெளி அதிரடிப்படை முகாம் மீது நேற்று முன் தினம் இரவு விடுதலைப் புலிகள் மோட்டார் குண்டுகளைப் பயன்படுத்தி தாக்குதல் நடத்தி உள்ளனர்.

இரவு 7. 45 மணிக்கு ஆரம்பமான இத்தாக்குதலை அதிரடிப்படையினர் முறியடித்து விட்டனர் என்றும் —

மூன்று மணிநேரம் இடம்பெற்ற இத்தாக்குதலின் போது ஓர் அதிரடிப்படை அதிகாரி கொல்லப்பட்டார் என்றும் —

இரண்டு பேர் காயமடைந்தார்கள் என்றும் — படை வட்டாரங்கள் தெரிவித்தன.

புலிகள் தரப்பில் பலத்த உயிரிழப்பு ஏற்பட்டதாகவும் அவை கூறின.

(இ-3)

## புத்தாண்டை முன்னிட்டு கொழும்பு உஷார் நிலை

கொழும்பு, டிச. 28

புத்தாண்டுகாலத்தில் விடுதலைப்புலிகளின் தாக்குதல் கொழும்பில் இடம் பெறலாம் என்ற தகவலையடுத்து கொழும்பு நகரம் திடீர் திடீர் எனச் சுற்றி வளைக்கப்பட்டு அங்கு தேடுதல் நடத்தப்படுகிறது.

தமிழ் மக்கள் கூடுதலாக வாழும் பகுதிகளே சுற்றி வளைப்புக்குள்ளாகின்றன.

ஏராளமான படையினர் நகரில் குவிக்கப்பட்டுள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

(இ3-150)

## புறக்கோட்டையில் ஷெல் குண்டுகள்!

### தமிழ் வர்த்தகர் கைது!!

கொழும்பு, டிச. 28

கொழும்பு புறக்கோட்டையில் அமைந்துள்ள வர்த்தக நிலையம் ஒன்றை கடந்த புதன் இரவு சுற்றிவளைத்த குற்றத் தடுப்புப் பொலீஸார் அந்த வர்த்தக நிலையத்தில் மறைத்து வைக்கப்பட்டிருந்ததாகக் கூறப்படும் ஆர். பி. ஜி ஷெல்களையும் வேறு ரக மோட்டார்களின் உதிரிப் பாகங்களையும் கைப்பற்றினர் என ''லங்காதீப'' நாளிதழ் தெரிவிக்கிறது.

அந்த வர்த்தக நிலையத்தின் உரிமையாளரும் கோடீஸ்வரருமான தமிழர் ஒருவர் பொலீஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

கைப்பற்றப்பட்ட மோட்டார் உதிரிப்பாகங்களை கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த இரு முஸ்லிம்களிடமிருந்து தான் கொள்முதல் செய்ததாக விசாரணையின் போது அந்த வர்த்தகர் தெரிவித்துள்ளார்.

(இ-10)

### சென்னை மத்திய சிறையில்

## ஜெயலலிதாவைச் சந்திக்க வெளியாருக்குத் தடை!

கொழும்பு, டிச. 28

தற்பொழுது சென்னை மத்திய சிறையில் வைக்கப்பட்டுள்ள தமிழ்நாடு முன்னாள் முதலமைச்சர் ஜெயலலிதாவைச்சிறைக்குச் சென்று வெளியார் சந்திப்பதற்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

ஜெயலலிதாவின் வழக்கறிஞரும் மிக நெருங்கிய உறவினர்களும் மட்டுமே அவரைஇனி சிறையில் சந்திக்க முடியும் ம் என்றும் —

வழக்கறிஞர்கள் கூட வழக்குத் தொடர்பான விடயங்களை மட்டுமே அவருடன் பேச முடியும் என்றும் — தமிழ் நாடு சட்ட அமைச்சர் ஆலடி அருணா தெரிவித்தார்.

தம்மைச் சந்திப்பதற்கு வந்தவர்கள் மூலம் ஜெயலலிதா அறிக்கைகளை வெளியிட்டுள்ளார் என்றும்—

இது தண்டனைக்குரிய குற்றம் என்றும் ஆலடி அருணா மேலும் தெரிவித்தார்.

(இ)

## ஈழத்தமிழர் பிரச்சினையில் இந்திய அரசு அலட்சியப் போக்கு

### திராவிடர் கழகம் கண்டனம்

சென்னை, டிச. 28

ஈழத்தமிழர் பிரச்சினையில் இந்திய மத்திய அரசு காட்டும் அலட்சியப் போக்கைக் கண்டிப்பது என்று கூறும் தீர்மானம் ஒன்று திராவிடர் கழக மாநாட்டில் நிறைவேற்றப்பட்டது.

சென்னையில் கடந்த மூன்று நாள்கள் நடந்த கழக மாநாட்டிலேயே இத்தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

தமிழக மீனவர்களை இலங்கை கடற்படை அவ்வப்போது தொடர்ந்து தாக்கி வருவதுமட்டுமல்லாமல்அவர்களைக் கொல்வது போன்ற சம்பவங்களும் இடம்பெறுகின்றன.

இது வேதனைக்குரிய நிலையாகும்.

இதை உலக நாடுகளுக்கு முன்னால் கொண்டு சென்று இதற்கு மாற்றம் ஒன்றை ஏற்படுத்த வேண்டும் என்ற தீர்மானமும் நிறைவேறியது.

(இ-3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்கள்

## இலட்சுமிப்பிள்ளை கருணாகரன்

மந்திகை, அம்மன் கோயிலைச் சேர்ந்த காலஞ்சென்ற ஆசிரியர் கருணாகரனின் அன்பு மனைவி இலட்சுமிப்பிள்ளை 27-12-96 அன்று சிவபதம் எய்திவிட்டார்.

அன்னார் மந்திகை அம்மன் கோயில் சோமசேகரக் குருக்கள், சீதாலட்சுமி, மனோகரன், தனலட்சுமி(ஆசிரியை, யா/ புலோலி மெ.மி.த.க.பா) ஆகியோரின் அன்புத் தாயாரும், சோமாஸ்கந்தர் (இளைப்பாறிய இலிகிதர்), பரமேஸ்வரி, திலகவதி, வெற்றிவேலாயுதம்பிள்ளை (சிமெந்துக் கூட்டுத்தாபனம்) ஆகியோரின் மாமியாரும், வாகீசன், சாந்தினிதேவி (ஆசிரியர்கள், யா/ நாகர்கோயில் அ.மி.த.க.பா), உருத்திரன், மேனகா, கௌரி, லக்ஸ்மன் ஆகியோரின் பேர்த்தியும், தக்ஷாயினி, பிரியங்கா ஆகியோரின் அன்புப் பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று (28-12-96) சனிக்கிழமை காலை 9.00 மணிக்கு நடைபெறும்.

தகவல்:
**க. சோமசேகரக் குருக்கள்**

மந்திகை அம்மன் கோயிலடி,
புலோலி. (44365)

## வேலுப்பிள்ளை மயில்வாகனம்

(இளைப்பாறிய வரி உத்தியோகத்தர்,
இறைவரித் திணைக்களம்)

மகாதனை, தெல்லிப்பளையை நிரந்தர வசிப்பிடமாகவும் ''முருகபதி'' புகையிரத நிலையவீதி, கொக்குவிலைத் தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட வேலுப்பிள்ளை மயில்வாகனம் 26-12-96 இல் காலமானார்.

அன்னார் பவளக் கொடியின் அன்புக் கணவரும், சுபாஜினி (பல்கலைக்கல்லூரி, வவுனியா), சுபாகரன் (ஜேர்மனி), பாலாஜினி, (யூனியன் கல்லூரி, மாணவி), சுதர்ஜினி, (மகாஜனக் கல்லூரி மாணவி) ஆகியோரின் அன்புத் தந்தையும், திருமதி இரத்தினம், சுப்பிரமணியம், தனபாலசிங்கம் (இ.போ.ச) ஆகியோரின் சகோதரரும், திருமதி விசாலாட்சி பொன்னுத்துரை, செல்வரத்தினம், இராசையா, திருமதி சுந்தரப்பிள்ளை, அண்ணாமலை, சிவப்பிரகாசம், வைத்தீஸ்வரன் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று 28-12-96 காலை 11.00 மணிக்கு கோம்பயன்மணல் மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
**மனைவி.**

''முருகபதி''
புகையிரத நிலைய வீதி,
கொக்குவில். (9125)

## வித்துவான் ம. முருகேசன்

(ஓய்வு பெற்ற ஆசிரியர்)

அல்வாய் வடக்கைப் பிறப்பிடமாகவும், கொழும்பு மயூரா பிளேசில் வசித்தவருமாகிய வித்துவான் ம. முருகேசன் 25-12-96 புதன்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னார் பவாவின் (ஓய்வு பெற்ற ஆசிரியை) அன்புக் கணவரும், பவானி (கனடா), காலஞ்சென்ற நவயுகன் (ஆசிரியர்), நவகுமார் (ஜேர்மனி), பகீரதி (கனடா), அனுஷா (கனடா), நவபாரதி (கொழும்பு) ஆகியோரின் அன்புத் தகப்பனாரும், தர்மகுலசிங்கம் (கனடா), சரோஜினிதேவி (ஆசிரியை - விசுவமடு), கிறிஸ்ரினா (ஜேர்மனி), தயாபரன் (ஜேர்மனி), இராசரத்தினம் (கனடா), பேபி (கொழும்பு) ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் கொழும்பில் நடைபெறும். இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக் கொள்கின்றேன்.

தகவல்:
க. முருகேசு (மைத்துனர்)
(ஓய்வு பெற்ற அதிபர்)

''கயிலை''
அல்வாய் வடக்கு,
அல்வாய். (44347)

## பஸ்தியாம்பிள்ளை மரியாம்பிள்ளை

அந்தரம் பஸ்தியாம்பிள்ளையின் மகன் மரியாம்பிள்ளை 26-12-96 அன்று காலமானார்.

இவர் காலஞ்சென்ற யோகரட்னத்தின் (முன்னாள் ஆசிரியை, யாழ். திருக்குடும்ப கன்னியர்மடம்) அன்புக் கணவரும், தவராஜாவின் (லண்டன்) அன்புத் தந்தையும், யசோதாவின் மாமனாரும், ஜெவ்றியின் அன்புப் பேரனும், காலஞ்சென்ற கிறிஸ்ரோபர், பிரான்சிஸ் அசிசி, அன்ட்ரூ (முன்னாள் ஆசிரியர் - யாழ். சென்பற்றிக்ஸ் கல்லூரி - லண்டன்), மலர் (ஜேர்மனி), ஹெலன் (லண்டன்) ஆகியோரின் அன்புச் சகோதரரும், திருமதி நாகரட்னம் யோசப், திருமதி தங்கரத்தினம் கனகராயர் (இளைப்பாறிய ஆசிரியைகள் - கொழும்பு), அருட் சகோதரிகள் லுமினா, தார்சிலா (திருக்குடும்பக் கன்னியர்மடம்) ஆகியோரின் மைத்துனரும், திருமதி செல்வராணி சுபேந்திரன், திருமதி டொறின் மன்மதநாயகம் (ஆசிரியைகள்) ஆகியோரின் மாமனாருமாவார்.

அன்னாரின் நல்லடக்கம் இன்று (28-12-96) காலை 10 மணிக்கு யாழ். புனித மரியன்னை சேமக்காலையில் நடைபெறும்.

தகவல்:
**ம. ரூபன்**

268, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம். [44372]

## நியாய விலையில் பொங்கல் பொருள்கள்

யாழ்ப்பாணம், டிச. 28

எதிர்வரும் பொங்கல் தினத்தை முன்னிட்டு யாழ். பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம், பொங்கல் பொருள்களை நியாய விலையில் விநியோகிப்பதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டு வருகிறது. (இ-15)

## அரச ஊழியர் முற்பணம்

நவாலி, டிச. 28

அரசாங்க உத்தியோகத்தர்கள் 1997 ஆம் ஆண்டுக்கான விசேட முற்பணம் ரூபா ஆயிரம் பெறுவதற்கான சுற்றறிக்கை சகல அரச திணைக்களங்களுக்கும் அரசாங்க நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சினால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. (இ-100)

## விண்ணப்பம் ஏற்பு இல்லை

வாக்காளர் பதிவேட்டின் உறுதிப்படுத்திய பிரதிகளுக்கான விண்ணப்பங்கள் யாழ். தேர்தல் அலுவலகத்தில் மறு அறிவித்தல் வரை ஏற்றுக் கொள்ளப்படமாட்டாதென உதவித் தேர்தல் ஆணையாளர் அறிவித்துள்ளார். [இ-100]

## நிறைவு நாளும் சான்றிதழ் வழங்கலும்

யாழ். பல்கலைக்கழக புறநிலைப் படிப்புக்கள் அலகின் ஏற்பாட்டில் கடந்த இரு மாதங்களாக இடம் பெற்று வந்த ''உடற்கல்வியும் விளையாட்டுக்களும்'' அடிப்படை கற்கைநெறி தொகுதி III இன் நிறைவு நாளும், சான்றிதழ் வழங்கும் வைபவமும் இன்று பிற்பகல் 2-30 மணிக்கு புவியியற்றுறை மண்டபத்தில் நடைபெறும்.

இணைப்பாளர் இரா. சிவச்சந்திரன் தலைமையில் நடைபெறும் இவ் வைபவத்தில் பதில் துணைவேந்தர் பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு சான்றிதழ்களை வழங்குவார். (இ-3)

## விண்ணப்பம் கோரப்படுகிறது

கமநலசேவைகள் திணைக்களத்தின் பெரும்பாக உத்தியோகத்தர் தரம் II க்கு ஆட்சேர்ப்பதற்காக விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

பட்டதாரிகள் அல்லது அதற்குச் சமமான தகைமை உடையவர்களை எதிர்வரும் 15 ஆம் திகதிக்கு முன்பாக விண்ணப்பக்குமாறு கோரப்பட்டுள்ளது. (இ-3)

## கோழிக் குஞ்சுக்கு அம்மைநோய் தடைமருந்து

வலிகாமம் தெற்கு பிரதேச செயலகத்தினர் மூலம் முதல் தடவையாக விநியோகிக்கப்பட்ட வளர்ப்புக் கோழிக் குஞ்சுகளுக்கு அம்மை நோய் தடைமருந்து வழங்கப்பட உள்ளது.

வலிகாமம் தெற்கு பிரதேச செயலர் அலுவலகம், சுன்னாகம் கால்நடை வைத்தியர் அலுவலகம், உடுவில் கற்பொக்கணை கலைமதி சனசமூக நிலையம், இணுவில் கந்தசாமி கோயிலடி ஆகிய இடங்களில் வைத்து எதிர்வரும் திங்கட்கிழமை அம்மை நோய் தடை மருந்து வழங்கப்படும்.

முதல் முறை வழங்கப்பட்ட கோழிக்குஞ்சுகளைப் பெற்றவர்கள் மேற்படி இடங்களில் வசதி போல் தமது கோழிக் குஞ்சுகளை எடுத்துச் சென்று [illegible] மருந்து பெற்றுக் கொள்ளுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது. (இ-152)

# மரண அறிவித்தல்கள்

## திருமதி ஆச்சிமுத்து வயிரமுத்து

கோண்டாவில் கிழக்கில் வசித்தவரும், தற்காலிகமாக வவுனிக்குளத்தில் வசித்து வந்தவருமான காலஞ்சென்ற வயிரமுத்துவின் அன்பு மனைவி திருமதி ஆச்சிமுத்து வவுனிக்குளத்தில் 1-12-96 இல் காலமானார்.

இவர் விநாயகமூர்த்தி, சிவபாக்கியம், கமலாதேவி, துரைராசா ஆகியோரின் அன்புத் தாயாரும், கோபாலசிங்கம், கிருஷ்ணபிள்ளை, அன்னபூரணம், செல்வராணி ஆகியோரின் அன்பு மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் வவுனிக்குளத்தில் 2-12-96 இல் நடைபெற்றன.

தகவல்:
**வ. துரைராசா**
(மகன்)

வேம்பன் ஒழுங்கை,
உரும்பிராய், தெற்கு. (44370)

## செல்லத்துரை மயில்வாகனம்

பண்டத்தரிப்பு வடலியடைப்பைப் பிறப்பிடமாகவும், உரும்பிராயை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லத்துரை மயில்வாகனம் 25-12-96 இல் மட்டக்களப்பில் காலமானார்.

அன்னார் புஸ்பமலரின் அன்புக் கணவரும், ரூபினி (France), காந்தரூபன் (Australia), கலாநிதி ஆகியோரின் அன்புத் தந்தையும், தயாபரனின் (France) மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் மட்டக்களப்பில் அவரது மைத்துனி புனிதமலரின் இல்லத்தில் இன்று (28-12-96) நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத் தருகின்றோம்.

தகவல்;
**சந்திரன்**

உரும்பிராய் தெற்கு,
உரும்பிராய். (9128)

## வைரவன் வேலுப்பிள்ளை

(ஓய்வு பெற்ற யாழ். வைத்தியசாலை ஊழியர்)

அச்சுவேலி வடக்கைப் பிறப்பிடமாகக் கொண்ட வைரவன் வேலுப்பிள்ளை (ஓய்வு பெற்ற யாழ். வைத்தியசாலை ஊழியர்) 18-12-96 இல் கிளிநொச்சியில் காலமானார்.

இவர் சின்னப்பிள்ளையின் அன்புக் கணவரும், முத்துலிங்கம் (தேவி அரிசி ஆலை), செல்லபாக்கியம், சிவபாக்கியம் ஆகியோரின் அன்புத் தந்தையும், தேவமலர், பரமகுரு, அழகரத்தினம் ஆகியோரின் அன்பு மாமனாரும், வன்னியசிங்கத்தின் பெரிய தகப்பனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் கிளிநொச்சியில் நடைபெற்றன என்பதை உற்றார், உறவினர், நண்பர்களுக்கு அறியத் தருகிறோம்.

தகவல்:
**செ. சிறிதேவராஜலிங்கம்**
(பேரன்)

இல 27, ஸ்ரான்லி வீதி, (சிறி செல்வா மினி)
யாழ்ப்பாணம். (44371)

## திருமதி கௌரி சுந்தரமூர்த்தி

(ஆசிரியை, இணுவில் மத்திய கல்லூரி)

இணுவில் கிழக்கு, திருமதி கௌரி சுந்தரமூர்த்தி அவர்கள் 26-12-96 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் இணுவில் மேற்கு கந்தையா சுந்தரமூர்த்தி (ஆய்வுகூட தொழில் நுட்ப உத்தியோகஸ்தர்- M.L.T,-அரசினர் ஆயுள்வேத போதனா வைத்தியசாலை, கைதடி) அவர்களின் அன்பு மனைவியும், செல்வன் மாறன் (யாழ். இந்துக் கல்லூரி, ஆண்டு 8 மாணவன்) அவர்களின் அன்புத் தாயாரும், இணுவில் கிழக்கு வேலுப்பிள்ளை (இளைப்பாறிய ஆசிரியர்), செல்லம்மா (இளைப்பாறிய ஆசிரியை) தம்பதிகளின் அன்பு மகளும், செல்வன் திருவருள், திருமதி அருள்மொழி சுரேசன் (நெதர்லாந்து), செல்வி வளர்மதி (கொழும்பு), செல்வி மாதுமை ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற கந்தையா குலேந்திரா (முன்னாள் உதவி அரசாங்க அதிபர், கோப்பாய்), சத்தியமூர்த்தி (பிரதம தபால் அதிபர், தெல்லிப்பளை), திருமதி கமலவேணி, திருமதி சத்தியவேணி, இரவீந்திரன் (கிராம சேவையாளர், இணுவில் மேற்கு), திருமதி விசியவேணி, திருமதி அருள்சோதி, செல்வி கலாவதி (ஆசிரியை, இணுவில் இந்துக் கல்லூரி), செல்வன் சண்முகேந்திரன் (இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம், கிளிநொச்சி), சுரேசன் (நெதர்லாந்து) ஆகியோரின் அன்பு மைத்துனியும், திருமதி குலேந்திரா, சிவஈஸ்வரி, யோகநாதன் (பிரதி அதிபர், இணுவில் இந்துக் கல்லூரி), திருமதி சத்தியமூர்த்தி, தவயோகராணி, ஆனந்தராசா (ஆசிரியர், இணுவில் இந்துக் கல்லூரி), திருமதி இரவீந்திரன் வனஜா, சிவகுமார் (ஆசிரியர், இணுவில் மத்திய கல்லூரி), ஜெகநாதர் ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 27-12-96 வெள்ளிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் இணுவில் காரைக்கால் இந்து மயானத்தில் தகனம் செய்யப்பட்டன. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
**க. சுந்தரமூர்த்தி**
(கணவன்)

இளந்தாரி கோயிலடி,
இணுவில் கிழக்கு,
இணுவில். (44363)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடமராட்சியில் பங்கீட்டுக்கு அமோனியா உரம் விநியோகம்

வடமராட்சி, டிச. 28

வடமராட்சி விவசாயிகளுக்கு அமோனியா உரம் பங்கீட்டு அடிப்படையில் வழங்கப்பட்டு வருகிறது.

புலோலி கமநலசேவை நிலையத்தினால் வழங்கப்படும் அமோனியா உரத்தைப் பெறும் விவசாயிகள் ஒரு மூடை அமோனியா உரத்தைப் பெற 5 கிலோ மண்ணை எடுத்துச் செல்ல வேண்டும்.

மண்ணை உரத்துடன் கலந்தே உரம் வழங்கப்படுகிறது. (இ-173)


## ஸ்ரார் கல்வி நிலையம்

**சிவன் வீதி, சுன்னாகம்.**

# 98, 99 A/L

**புதிய பிரிவுகள் ஆரம்பம்**

**29 - 12 - 96 காலை 7.30**

பொருளியல் — திரு. மோகன்
கணக்கியல் — திரு. கொலின்
வர்த்தகவியல் — திரு. முரளி
புள்ளி விவரவியல் — திரு. ஸ்ரெனிஸ்
அளவையியல் — திரு. R. P. சர்மா
தமிழ் — திரு. ஆர்த்திகன்
இந்து நாகரிகம், இந்து சமயம் — திரு. இராஜேஸ் கண்ணா
நாடகமும் அரங்கியலும் — பிரபல ஆசிரியர் (9122)



## தமிழ் வகுப்புகள் ஆரம்பமாகின்றன

- 97, 98 - A|L
  சித்தி விநாயகர் - மல்லாகம்.
- 97, 98 - A|L
  கலைமகள் - ஏழாலை.
- 97, 98 - A/L, 97-O/L yr. - 10, 9
  வினைல்ஸ் - சுன்னாகம்.
- 98 - A/L, 97, - O/L Yr. - 10, 9
  நாதன்ஸ் அக்டமி - சண்டிலிப்பாய்.
- 96-Day, 97, 98 - A/L, 97 - O|L Yr. - 10, 9
  ஈசன் - கோண்டாவில்.
- 98 - A|L, 97, - O|L Yr. - 10, 9
  N. S. C. - மருதனார்மடம்.
- 97, 98 - A|L [ பிரத்தியேகம் ]
  கொக்குவில்.

**ஆசிரியர்:**
**பண்டிதர் - மாவை. V. M. லிங்கம்**

(44355)


## 31ஆம் நாள் நினைவஞ்சலி



பிறப்பு: 08 — 10 — 1939

இறப்பு: 28 — 11 — 1996

## அமரர் ஐயம்பிள்ளை இராசேந்திரம்

**(முகாமையாளர், சிங்கர் கம்பனி, சுன்னாகம்)**

ஆறாத்துயரில் எம்மை ஆழ்த்திவிட்டு, மீளாத்துயில் கொண்டு திங்கள் ஒன்று மறைந்தாலும், உங்கள் பாச நினைவுகள் என்றும் எங்கள் நெஞ்சங்களில் நீங்காது நிலைத்து நிற்கும்.

உங்கள் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கும்:

**அன்பு மனைவி, மக்கள்,**
**உற்றார், உறவினர்கள்.**

541, பருத்தித்துறை வீதி,
நல்லூர். (44353)

# சங்கானை பிரதேச செயலக வவுச்சர்கள்

சங்கானைப் பிரதேச செயலகத்தினால் டிசம்பர் மாதத்துக்குரிய ஓய்வூதிய வவுச்சர்களும், காசோலைகளும் அந்த அந்த வங்கிகளுக்கு கடந்த வாரம் அனுப்பப்பட்டுள்ளதாக பிரதேச செயலகம் தெரிவித்துள்ளது.

# ஒளி விழா

யாழ்ப்பாணம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் நடத்தும் ஒளி விழா நாளை மறுதினம் திங்கட்கிழமை யாழ். பலநோக்குக் கூட்டுறவுச் சங்க கேட்போர் கூடத்தில் நடைபெறும். காலை 10.30 மணிக்கு சங்கத் தலைவர் ச. த. கணநாதனின் தலைமையுரையுடன் இது ஆரம்பமாகும். (இ-15)

# அவசர திருத்த வேலைகளுக்கு நிதி

யாழ்ப்பாணம் கல்வி வலயம் ஒன்று, இரண்டு ஆகியவற்றில் உள்ள பாடசாலைகளின் அவசர திருத்த வேலைகளுக்கென இவ்வருடம் 10 லட்சத்து 62 ஆயிரம் ரூபா நிதி, ஒதுக்கீடு செய்யப்பட்டு பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளது.

கல்விவலயம் இரண்டில் பின்வரும் பாடசாலைகளுக்கு திருத்த வேலைக்கென நிதி ஒதுக்கீடு வழங்கப்படுகின்றது.

ஏழாலை ஸ்ரீ முருகன் — ரூ. 4, 654

உடுவில் மான்ஸ் த. க. பா. ரூ. 5, 474

உடுவில் மான்ஸ் ம. வி. — ரூ. 5, 684

சுன்னாகம் திருஞானசம்பந்தர் வித்தியாலம் — ரூ. 7, 815.

தாவடி இந்து த. க. பா — ரூ. 4, 200.

கோட்டைக்காடு அ. த. க. பா. — ரூ. 5, 390

மயிலணி சைவ வித்தி — ரூ. 7, 740

புன்னாலைக் கட்டுவன் அ. த. க. பா — ரூ. 9, 295.

ஏழாலை சைவ சன்மார்க்க வித்தியாசாலை — ரூ. 9,125

# தீக்காயங்களுடன் இருவர் ஆஸ்பத்திரியில்

இளம் குடும்பப் பெண் ஒருவர் உடல் முழுவதும் எரிந்த நிலையில் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

பருத்தித்துறை கற்கோவளம் பகுதியில் மூன்று நாள்களுக்கு முன் இடம்பெற்ற இச்சம்பவத்தில் ஜெயராஜ் புவனேஸ்வரி (வயது 23) என்ற பெண்ணே தீக்காயங்களுக்குள்ளானவராவார்.

மந்திகை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ். ஆஸ்பத்திரிக்கு இவர் அனுப்பி வைக்கப்பட்டுள்ளார்.

இதேவேளை கடந்த புதன் கிழமை இரவு படுக்கையில் தீப்பற்றி எரிந்ததாக மற்றொருவர் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

கோண்டாவிலைச் சேர்ந்த கணபதி குமரேஸ்வரன் (வயது 40) என்பவரே இவர் ஆவார். (இ-15)


## ஸ்ரார் கல்வி நிலையம்

சிவன் வீதி, சுன்னாகம்.

**ஆண்டு 5-க்கான**
**புலமைப் பரிசில் வகுப்புகள் நடைபெறுகின்றன.**

**பிரிவு II ஆரம்பம்**

**29-12-96 (காலை 9.00)**

**ஆசிரியர்: திரு. ஸ்ரீ**

(9123)


# பதிவு செய்யாத பார்மஸிகள் மீது நடவடிக்கை எடுப்பதற்கு முடிவு

யாழ்ப்பாணம், டிச. 28

யாழ். மாவட்டத்தில் இயங்கும் மருந்தகங்களில் பதிவு செய்யப்பட்ட, பதிவு செய்யப்படாத மருந்தகங்களின் விவரங்களை அனுப்புமாறு சுகாதார, நெடுஞ்சாலைகள், சமூக சேவைகள் அமைச்சு செயலாளர் டாக்டர் யு. ஏ. மெண்டிஸ் யாழ். சுகாதாரப் பிரதிப் பணிப்பாளர் நாயகத்தைக் கேட்டுள்ளார்.

பதிவு செய்யப்படாத் மருந்தகங்களில் போதிய அனுபவம் உள்ள மருந்துக் கலவையாளர்கள் பணிபுரியாததால் சுகாதாரச் சீர்கேடு ஏற்படுவதாகக் கிடைத்த பல முறைப்பாடுகளை அடுத்து இந்நடவடிக்கை எடுக்கப்படுவதாகவும் —

உணவு மற்றும் மருந்து பரிசோதகர் மூலம் பதிவு செய்த, பதிவு செய்யாத மருந்தகங்களின் பட்டியலை உடன் அனுப்புமாறும் — அவர் கேட்டுள்ளார்.

விவரங்களைப் பெற்றபின் தொடர்ந்தும் இயங்கும் அத்தகைய மருந்தகங்கள் (பார்மஸிகள்) மீது சட்ட நடவடிக்கை எடுக்க முடியும் என்றும் அவர் கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

இக்கடிதம் நாடு முழுவதிலும் உள்ள சுகாதார சேவைகள் திணைக்களங்களுக்கும் அனுப்பப்பட்டுள்ளது. (இ-3)

# மார்பு நோய் ஆஸ்பத்திரி ஊழியருக்குச் சீருடை இல்லை

தென்மராட்சி, டிச. 28

சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் இயங்கும் மயிலிட்டி மார்பு நோய் ஆஸ்பத்திரி ஊழியர்களுக்கு கடந்த ஏழு வருடங்களாகச் சீருடைகள் வழங்கப்படவில்லை.

யாழ். மாவட்டத்திலுள்ள ஏனைய ஆஸ்பத்திரிகளின் ஊழியர்களுக்கு வருடாவருடம் சீருடைகள் வழங்கப்பட்டுவருகின்ற போதிலும் சீருடை வழங்குவதில் தம்மை மாற்றான் தாய் மனப்பான்மையில் சுகாதாரப் பகுதியினர் நடத்துவதாக ஊழியர்கள் தரப்பில் தெரிவிக்கப்பட்டது. (இ-117)

# படையிலிருந்து தப்பிய மூவர் கொள்ளையின் போது கைது!

கொழும்பு, டிச. 28

ஆயுதப்படைகளில் இருந்து விலகிச்சென்ற மூன்று பேர் தலைமையிலான கொள்ளைக் கோஷ்டி ஒன்றை பிங்கிரிய பொலீஸார் கைது செய்துள்ளது.

பல கொள்ளைகள் வழிபறிகள் தொடர்பாக மொத்தம் 8 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலீஸார் தெரிவித்தனர்.

தங்க ஆபரணங்களையும், வேறு பெறுமதியானபொருள்களையும் பொலீஸார் இவர்களிடம் இருந்து கைப்பற்றியுள்ளார்கள்.

விமலசூரிய, பிங்கிரிய, ஹோமாகம, நவகம்புர ஆகிய இடங்களில் உள்ள வங்கிகளிலும் இக்கோஷ்டி கொள்ளையடித்துள்ளது என்றும் விசாரணைகளில் இருந்து தெரிய வந்துள்ளது. (இ-3)

## கண்ணீர் அஞ்சலி

எமது சக உத்தியோகத்தர்
**திரு. A. E. பீரிஸ் அவர்களின் தந்தையார்**
பண்டத்தரிப்பைச் சேர்ந்த

### திரு. தாவீது அல்வின்

அவர்களது

மறைவால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**அலுவலக உத்தியோகத்தர்கள், ஊழியர்கள்.**

போதனா வைத்தியசாலை,
யாழ்ப்பாணம். (சி-3805)

## ஓராண்டு நினைவஞ்சலி



பிறப்பு: 1912 — 02 — 29

இறப்பு: 1995 — 12 — 28

## யேக்கப் ஆசீர்வாதம்

(நீதிவான் நீதிமன்ற ஓய்வு பெற்ற ஆராய்ச்சியாளர்)

**திதி: 1996 - 12 - 28**

பத்தும் பெற்றுப் பெருவாழ்வு கண்ட
ஆசீர்வாதம் ஐயா!
உம்மை இழந்த துயர் ஆறுமுன்னே
உம் அன்பு மகள் **பாலசுந்தரம் றோசலினும்**
இறை பதம் அடைந்தாள்!
உங்கள் இருவர் பிரிவால் - நாம் இன்று
நெஞ்சம் குமுறி அழுகின்றோம் - ஐயா!

**மனைவி - செபமாலை, மக்கள்,**
**மருமக்கள், சகோதரர்கள்.**

21/4, அடப்பன் வீதி,
யாழ்ப்பாணம். [9124]


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எதிர்க்கட்சி வரிசையில் அமர்ந்து கொண்டு

# ஆளும் கட்சியை ஆதரிக்கும் தமிழ்க் கட்சிகள்

## நாடாளுமன்ற நிகழ்ச்சிகளை நேரில் பார்த்தாலே உண்மை தெரியவரும்

வரவு - செலவுத் திட்டம் மீதான விவாதங்கள் யாவும் முடிவடைந்துவிட்டன. கிட்டத்தட்ட ஒரு மாதகாலமாக நாடாளுமன்ற விவாதங்கள் பத்திரிகைகளின் பக்கங்களை ஆக்கிரமித்திருந்தன.

பிரிட்டனின் நாடாளுமன்ற சம்பிரதாயங்களை நமது நாட்டு நாடாளுன்றத்திலும் காணக்கூடியதாக இருந்தாலும், நாடாளுமன்ற உறுப்பினர்கள் நாடாளுமன்ற அமர்வுகளில் எவ்வாறு நடந்துகொள்கிறார்கள் என்பதை அவர்களைத் தெரிவு செய்த வாக்காளர்கள் நேரில் அவதானிக்க முடியாதவர்களாக இருக்கின்றனர்.

பிரிட்டனில் நாடாளுமன்ற அமர்வுகள் தொலைக்காட்சிகளில் அங்கு காண்பிக்கப்படுகின்றன. ஈ.ரி.வி. தொலைக்கட்சி மூலமாக நம்நாட்டவரும் பிரிட்டனின் நாடாளுமன்ற அமர்வுகளை இங்கிருந்தே காணக்கூடியதாகவுள்ளது.

ஆயினும், நம் நாட்டின் நாடாளுமன்ற அமர்வுகள் தொலைக் காட்சியில் காண்பிக்கப்படுவதில்லை. குறிப்பிட்ட சில முக்கிய நிகழ்ச்சிகளின்போது மாத்திரமே நம் நாட்டு நாடாளுமன்ற அமர்வுகள் காண்பிக்கப்பட்டு வருகின்றன.

நாடாளுமன்ற கூட்டத் தொடரை வருடா வருடம் ஜனாதிபதி ஆரம்பித்து வைக்கும்போதும், வரவு- செலவு திட்டம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் போதும் நாடாளுமன்ற அமர்வுகளை இங்கு தொலைக் காட்சியில் காண்பிக்கிறார்கள்.

ஐந்து ஆண்டுகளுக்கு ஒரு முறை நாடாளுமன்ற உறுப்பினர்களைத் தெரிவு செய்யும் வாக்குரிமையோடு திருவாளர் பொதுஜனத்தின் கடமை முடிவடைந்துவிடக் கூடாது.

ஜனநாயகம் என்பது வெளிப்படைத்தன்மையோடு இணைந்ததாகவே இருந்து வரவேண்டும்.

அதன் மூலமாகவே ஜனநாயக நடைமுறைகளை அவதானிக்கவும், அவற்றிலே பங்கெடுக்கவும் பரந்துபட்ட மக்களால் இயலக்கூடியதாகவிருக்கும்.

தாம் தெரிவு செய்யும் நாடாளுமன்ற உறுப்பினர்கள், தெரிவு செய்து அனுப்பப்பட்ட கடமையை எவ்வாறு செய்கிறார்கள் என்பதை, ஐந்தாண்டு காலத்தில் வாக்காளர்கள் கண்காணிக்கக் கூடியதாக இருக்க வேண்டும்.

அப்போதுதான் மறுமுறையும் வாக்களிக்கும் சந்தர்ப்பத்தில் தமது தெரிவை தெளிவான முறையில் அவர்களால் மேற்கொள்ளக் கூடியதாக இருக்கும்.

நாடாளுமன்ற அமர்வுகளை தொடர்ந்து தொலைக் காட்சிகளில் காண்பிப்பது மூலம் தமது பிரதிநிதிகள் தமது சார்பாக அங்கு எவ்வாறு நடந்து கொள்கிறார்கள் என்பதனை வாக்காளர்கள் நேரில் காணக்கூடியதாகவிருக்கும்.

நாடாளுமன்றத்தில் குறட்டைவிட்டு உறங்கும் பிரதிநிதிகளையும் வாக்காளர்கள் கண்டு கொள்ள முடியும்.

நமது நாடாளுமன்ற அமர்வுகளை பார்வையிட பொது மக்கள் முன்னர் அனுமதிக்கப்பட்டனர். பார்வையாளர் பகுதியில் இருந்து நாடாளுமன்ற நடைமுறைகளை அவதானிக்கக் கூடியதாக இருந்தது.

பாதுகாப்புக் காரணங்களை முன்னிட்டு இப்போது அந்த நடைமுறைக்கும் தடை விதிக்கப்பட்டிருக்கிறது.

நாடாளுமன்ற பார்வையாளர் பகுதிக்கு பொதுமக்கள் எவரும் தற்போது அனுமதிக்கப்படுவதில்லை. பத்திரிகையாளர்கள் மட்டுமே அனுமதிக்கப்படுகிறார்கள்.

எனவே பத்திரிகைகள் ஊடாக மட்டுமே நாடாளுமன்றச் செய்திகளை வாக்காளர்கள் அறிந்து கொள்ள முடிகிறது.

நாடாளுமன்ற ஹன்சாட்டில் பதியப்படவும், மறுநாள் பத்திரிகைகளில் வெளிவரவுமே பயன்பாடு உடையனவாக மாறிவிடுகின்றன.

அதனால் நாடாளுமன்றத்தில் ஆற்றப்படும் உரைகளும் மக்கள் அறிந்து கொள்ளச் சொல்லப்பட்ட செய்திகளாகவே அமைந்து விடுகின்றன.

நாடாளுமன்றத்தில் உரையாற்றுவதும் ஒரு வகையில் பத்திரிகைகளுக்கு வெளியிடும் அறிக்கைகள்தான். ''அரசாங்கம் கேட்காவிட்டாலும், நாம் நாடாளுமன்றத்தில் இப்படியெல்லாம் உரையாற்றி இருக்கிறோம் என்பதை மக்கள் அறிந்துகொண்டால் போதும். அடுத்த தடவையும் வாக்குக் கேட்டுப் போக வேண்டியிருக்கும் அல்லவா?'' என்று ஒரு நாடாளுமன்ற உறுப்பினர் சமீபத்தில் சொல்லியிருந்தார்.

**கொழும்பிலிருந்து வெளிவரும் "தினமுரசு" வார இதழில் "வெளிப்படையாகாத நாடாளுமன்ற அமர்வுகள், தமிழ்க் கட்சிகளின் நாடாளுமன்ற வாய்வீச்சுக்கள்" என்னும் தலைப்பில் "இராஜ தந்திரி" எழுதிய அரசியல் கட்டுரை இங்கு மறுபிரசுரஞ் செய்யப்படுகிறது.**

நாடாளுமன்றத்தில் உறுப்பினர்கள் ஆற்றும் உரைகளைத்தான் பெரும்பாலும் பத்திரிகைகள் வெளியிட்டு வருகின்றன.

ஒரு பொதுக்கூட்டத்தில் ஆற்றப்படும் உரைகள் மக்களை நோக்கி சொல்லப்படும் கருத்துகளாக அமைகின்றன. நாடாளுமன்ற உரைகள் அரசாங்கத்தை நோக்கி சொல்லப்படுபவையாக அமைந்திருக்கின்றன.

### நேரில் பார்த்தால் நிலைவரம் தெரியும்

ஆயினும் நமது நாடாளுமன்ற அமர்வுகளையும், நடைமுறைகளையும் நேரில்காணும் வாய்ப்புக் கிடைத்திருக்குமானால் நாம் நினைப்பதற்கு நேர்மாறானநிலைவரம்அங்கு இருப்பதைத்தான் ஒருவர் காணமுடியும்.

நாடாளுமன்ற அமர்வுகளின் போது ஆளும் கட்சித் தரப்பிலும், எதிர்க்கட்சிதரப்பிலும், பெரும்பாலான ஆசனங்கள் காலியாகவே காணப்படுகின்றன.

வரவு - செலவுத் திட்ட விவாதத்தின்போதுஒவ்வொரு அமைச்சுக்குமான நிதி ஒதுக்கீடு மீதான விவாதம் நடைபெறும்.

அவ்வாறு நடைபெற்ற விவாதங்களில் குறிப்பிட்ட அமைச்சின் அமைச்சர், பிரதியமைச்சர் தவிர ஆளும் கட்சித் தரப்பில் ஐந்து அல்லது ஆறு உறுப்பினர்கள் தான் அமர்ந்திருந்தனர். எதிர்க்கட்சி வரிசையிலும் அதே நிலைதான் காணப்பட்டது.

அன்றைய விவாதத்தில் உரையாற்றிய ஓர் உறுப்பினரின் உரையை செவிமடுத்திருக்க இருதரப்பிலும் கூட்டிப் பார்த்தாலும் பத்து உறுப்பினர்கள் கூட இல்லாதிருந்தனர்.

அது மட்டுமல்லாமல், உறுப்பினர்கள் உரையாற்றும் போது குறிப்பிட்ட அமைச்சர்கள் கூட சில சமயங்களில் வேறு வேலைகளில் மூழ்கி விடுவதையும் கவனிக்கக்கூடியதாக உள்ளது. ஏதாவது ஒரு பத்திரத்தில் கையொப்பம் இட்டுக் கொண்டிருப்பதையோ, அல்லது வேறு உறுப்பினருடன் பேசிக் கொண்டிருப்பதையோ அவதானிக்கத்தக்கதாக இருக்கிறது.

அவ்வாறான சந்தர்ப்பத்தில் ஆற்றப்படும் உரைகள் நாடாளுமன்ற ஹன்சாட்டில் ...

அந்த உறுப்பினரின் கூற்று மெத்தச் சரியான ஒன்றாகவே அமைந்திருக்கிறது.

இன்னொரு விடயத்தையும் கவனிக்கக் கூடியதாக உள்ளது.

நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் தமிழ்க் கட்சிகளின் உறுப்பினர்கள் எதிர்க்கட்சி வரிசையில் தான் அமர்ந்திருக்கின்றனர். இ.தொ.க. தலைவர் தொண்டமான் மட்டும் அமைச்சர் பதவி காரணமாக ஆளும் கட்சி வரிசையில் அமர்ந்திருக்கிறார். அவரது கட்சியின் நாடாளுமன்ற அங்கத்தினர்கள் எதிர்க்கட்சி வரிசையில் அமர்ந்திருக்கின்றனர். இது ஒரு சுவையான காட்சியாகவும் இருக்கிறது.

நாடாளுமன்றத்தில் உள்ள தமிழ்க் கட்சி உறுப்பினர்கள் எதிர்க்கட்சி வரிசையில் அமர்ந்திருப்பதற்கும், அவர்களது நடைமுறைக்கும் இடையேமுரண்பாடு காணப்படுகிறது. தமிழ்க்கட்சிகளின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆற்றும் உரைகளை மட்டுமே பத்திரிகைகள் வாயிலாகப் படிப்பவர்களுக்கு அவர்கள் எதிர்க்கட்சியாக செயற்படுவது போலவே நினைக்கத் தோன்றும். நாடாளுமன்ற நடைமுறைகளை நேரில் அவதானிக்கும் ஒரு வாய்ப்புக் கிடைத்தால் அந்த நினைப்பு பொய்த்து விடவே செய்யும்.

வாக்கெடுப்புக்களில் ஆளும் கட்சிக்கு எம். பிக்கள் சார்பாகவே தமிழ்க் கட்சி கை உயர்த்துகின்றனர். எதிர்க்கட்சி வரிசையில் உள்ள ஆளும் கட்சியினராகவே அவர்களது செயற்பாடுகள் காணப்படுகின்றன.

### தமிழ் எம். பிக்கள் பேச முடியாத நிலை

தமிழ்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் நாடாளுமன்றத்தில் உரையாற்றவே முடியாத ஒரு காலகட்டம் முன்னர் நிலவியது.

எதிர்க்கட்சித் தலைவராக அமரர் அமிர்தலிங்கம் பதவி வகித்த காலத்தில், அவர் பேச எழுந்தால் ஆளும்கட்சி வரிசையில் இருந்து கூச்சலும் குறுக்கீடும் சரமாரியாக எழும்.

'கொட்டியா, கொட்டியா' என்றெல்லாம் அவரை நோக்கிக் கூச்சல் போட்டுக் கொண்டிருப்பர்.

தற்போது தமிழ் எம். பிக்கள் பேச எழுந்தால் சபையில் அமைதி நிலவத் தொடங்கிவிடுகிறது, ஆளும் கட்சி உறுப்பினர்கள் குறுக்கிடுவதில்லை. பிரதான எதிர்க்கட்சி உறுப்பினர்களும் குறுக்கிடுவது கிடையாது.

ஐக்கிய தேசியக் கட்சியின் முக்கிய உறுப்பினர்கள் உரையாற்றுவதாகத் தெரிந்தால் ஆளும் கட்சி தரப்பில் உறுப்பினர்கள் எண்ணிக்கை அதிகமாக இருக்கும். குறிப்பிட்ட உறுப்பினர் அரசைக் கடுமையாகச் சாடும்போது பதிலடி கொடுத்துக் குறுக்கிடத் தயாராக ஆளும் கட்சி உறுப்பினர்கள் காணப்படுவர்.

தமிழ்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் பேசும்போது ஆளும் கட்சி, எதிர்க்கட்சி தரப்புகளில் ஆசனங்கள் காலியாக இருக்கும். அமர்ந்திருப்பவர்களும் மௌனமாகக் கேட்டுக் கொண்டிருப்பர்.

அரசாங்கத்தை கடுமையாகச் சாடி உரையாற்றினாலும் ஆளும் கட்சி உறுப்பினர்கள் குறுக்கிட மாட்டார்கள்.

எப்படித்தான் உரையாற்றினாலும் இறுதியில் தமக்கு ஆதரவாகத்தான் சபையில் கை உயர்த்தப் போகிறார்கள் என்பதால் ஆளும்கட்சி உறுப்பினர்கள் தமிழ் எம். பிக்களைக் குறுக்கீடு செய்வதில்லை.

தமிழ் எம். பிக்கள் தமது உரைகளில் எழுப்பும் கேள்விகளுக்கு அமைச்சர்கள் பதிலளிப்பதும் அரிதாகவே இருந்து வருகிறது.

அப்படிப் பதில் அளித்தாலும் கூட தமிழ் எம். பிக்கள் மிக அமைதியாக செவிமடுத்துக் கொண்டிருப்பர்.

தவறுகளை நியாயப்படுத்தும் வகையில் பதில்சொல்லப் பட்டாலும் தமிழ் எம். பிக்கள் குறுக்கிடாமல் இருந்து விடுவதையே அவதானிக்க முடிகிறது.

ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர்கள் மட்டுமே தமது உரைகளுக்கு பதில் அளிக்கப்படும்போது, அது தவறாக இருந்தால் பலமாகக் குறுக்கீடு செய்கிறார்கள்.

தமிழ்க்கட்சிகளின் நாடாளுமன்ற நடைமுறைகள் ஆளும் கட்சி உறுப்பினர்களின் நடைமுறைகளுக்கு ஒத்ததாகவே அமைந்திருக்கின்றன.

அரசாங்கத்திற்கு எதிராக தமிழ் எம். பிக்கள் தெரிவிக்கும் கருத்துக்கள் அவர்களது அரசியலுக்காக பேசப்படும் விடயங்களாகவே ஆளும் தரப்பால் கருதப்படுகிறது. ''அரசியலுக்காக அவ்வாறு பேசுகிறார்கள்: ஆனால் எங்களோடுதான் இருக்கிறார்கள்!'' என்பதுதான் தமிழ்க் கட்சி எம். பிக்கள் தொடர்பான ஆளும் தரப்பு, மனோபாவம் என்பதையே உணரக் கூடியதாக உள்ளது.

### நேர்மாறாக நடக்கும் வாசுதேவ

இதேவேளையில் ஆளும் கட்சி வரிசையில் உள்ள வாசுதேவ நாணயக்கார போன்றவர்களின் நிலை நேர்மாறாக அமைந்திருக்கக் காணப்படுகிறது.

ஆளும் தரப்பில் இருந்து கொண்டே அரசாங்கத்தின் நிலைப்பாடுகளுக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் ஒருவராக வாசுதேவ நாணயக்கார விளங்கி வருகிறார்.

வரவு - செலவுத் திட்ட வாக்கெடுப்பில் கூட வாசுதேவநாணயக்கார கலந்து கொள்ளவில்லை.

வாசுதேவ தன்னை ஒரு ஆளும் கட்சி உறுப்பினர் என்று சொல்வதற்கு வெட்கப்படவில்லை. அதே சமயத்தில் தனது கொள்கைக்கு மாறான நிலைப்பாடுகளை ஆதரிக்க மறுப்பவராகவே இருந்து வருகிறார்.

தமிழ்க்கட்சி எம். பிக்கள் தம்மை ஆளும்கட்சி சார்பாளராகச் சொல்ல வெட்கப்படுகின்றனர். தமது காரசாரமான உரைகள் மூலமாக எதிர்க்கட்சி உறுப்பினர்கள் போல மக்கள் கருத இடமளிக்கின்றனர். ஆனால் நாடாளுமன்றத்தில் அரசாங்கத்தை தோள்கொடுத்து தாங்கும் தூண்களாகவே விளங்குகின்றனர். நாடாளுமன்ற அமர்வுகள் தொலைக்காட்சிகளில் காண்பிக்கப்பட்டால் தமிழ்க்கட்சி எம். பிக்களின் மறுபக்கத்தையும் மக்கள் கண்டுகொள்ளக் கூடியதாகிவிடும். தமிழ்க்கட்சி எம். பிக்கள் நாடாளுமன்ற அமர்வுகளை தொலைக் காட்சியில் காண்பிப்பதை விரும்பமாட்டார்கள். பத்திரிகைகள் வாயிலாக தமது உரைகள் வெளியாவதை மட்டுமே விரும்புகின்றவர்களாக இருப்பார்கள்.

ஆளும் கட்சி, எதிர்க்கட்சி தரப்பின் ஏனைய உறுப்பினர்களும் நாடாளுமன்ற அமர்வுகள் தொலைக்காட்சிகளில் நேரடியாகக் காண்பிக்கப்படுவதை சங்கடமான விடயமாகவே கருதுவர்.

ஆளும் கட்சியும் நாடாளுமன்ற அமர்வுகள் நேரடியாக ஒளிபரப்பாவதை விரும்பாது. எதிர்க்கட்சி உறுப்பினர்கள் சில முக்கிய பிரச்சினைகளைப் பேசும்போது கூச்சல் போட்டே அவர்களது வாயை அடைத்துவிடும் வாய்ப்பு இல்லாமல் போவதை ஆளும் கட்சியும் விரும்பமாட்டாது.

நாடாளுமன்ற உறுப்பினர்கள் பலர் நாடாளுமன்ற சம்பிரதாயங்களை கடைப்பிடிக்கத் தவறுகிறார்கள் என்று சபாநாயகர் கே. பீ. ரத்நாயக்கா சமீபத்தில்குறைபட்டிருந்தமையும் அவதானிக்கத் தக்கதாகும்.

இவ்வாறான சூழ்நிலையில் நாடாளுமன்ற அமர்வுகளில் வெளிப்படைத் தன்மையை கொண்டு வரக்கூடிய துணிச்சல் அரசாங்கத்திற்கும் ஏற்படமாட்டாது.

நமது நாட்டைப்பொறுத்த வரை தேர்தல் காலங்கள் தவிர ஏனைய காலங்களில் தமக்கும் வாக்காளர்களுக்கும் இடையே ஒரு திரை தொங்கவிட்டிருப்பதைத் தான், அவர்களால் தெரிவு செய்யப்படும் பிரதிநிதிகள் விரும்பி வருகின்றனர். அதுதான் அவர்களுக்கு வசதியும் கூட. ★

---

### மண். எண்ணெய் தட்டுப்பாடு

வலி. தென்மேற்கு, டிச. 28

வலிகாமம் தெற்கு மேற்குப் பகுதிகளில் மண்எண்ணெய்க்கு பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது. (இ-145)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்லூர் [illegible] நூலகம்.

# பெருவில் பணயக்கைதிகள் பிரச்சினை தொடர்கின்றது

## இன்னும் 104 பேர் போராளிகளின் பிடியில்

லீமா, டிச, 28

பெரு நாட்டில் பணயக் கைதிகள் நெருக்கடி தொடர்கிறது.

அடுத்த கட்ட நடவடிக்கைகள் குறித்து முடிவு எடுக்க பெருவின் இடதுசாரி இயக்கமான ''துபெக் அமாறு'' போராளிக்குழு நேற்று ஓர் இரகசிய இடத்தில் கூடுவதாக இருந்தது.

பெரு நாட்டில் ஏழை மக்கள் படும் வேதனைகளையும், அரசின் பயங்கரவாத நடவடிக்கைகளையும் உலகின் கவனத்துக்கு கொண்டு வருவதில் முதல் கட்ட வெற்றி பெற்றுவிட்டோம் என போராளிகள் அறிவித்துள்ளனர்.

அடுத்த கட்ட இலக்கு சிறையில் வாடும் தங்கள் சகாக்களின் விடுதலையைச் சாதிப்பதாகும் என போராளிகள் தெரிவித்துள்ளனர்.

பணயக் கைதிகள் பிரச்சினைக்கு அரசு இராணுவத் தீர்வையே விரும்புகிறது எனத் தெரிவித்த போராளிகள் ''நாங்கள் பொறுமையாகக் காத்திருக்கிறோம். கடந்த 500 ஆண்டுகளாக பல்வேறு அடிமைத்தனங்களை பெரு நாட்டு மக்கள் பொறுமையோடு சகித்து வந்திருக்கிறார்கள். அது போல நாங்களும் காத்திருக்கிறோம்'' எனத் தெரிவித்துள்ளனர்.

போராளிகள் ஜப்பானியத் தூதரகத்தின் நுழைவாயில் பகுதியில் பயங்கர வெடி மருந்துகளைப் புதைத்துள்ளதாகவும், உள்ளே இருக்கும் 20 போராளிகளும் தங்கள் உடலில் 15 கிலோ வெடி மருந்துகளை கட்டி எப்போது வேண்டுமானாலும் வெடிக்க வைக்கத் தயார் நிலையில் இருப்பதாகவும் விடுவிக்கப்பட்ட பணயக் கைதிகள் தெரிவித்தனர்.

தூதரகத்தின் உள்ளே தற்போது 104 பணயக் கைதிகள் இருப்பதாகவும் — இவர்களில் பெரு நாட்டின் அதிபர் அல்பேட்டோ பூஜிமோரியின் உடன் பிறந்த சகோதரரும் ஒருவர் என்றும் — மேலும் தெரிவிக்கப்பட்டது. (இ-10)

## சீனப் பிரதமர் ரஷ்யா விஜயம்

சீனப் பிரதமர் லீபெங் 3 நாள் விஜயமாக நேற்று ரஷ்யா சென்றுள்ளார்.

அவர் ரஷ்ய அதிபர் யெல்ட்ஸினைச் சந்திப்பார். யெல்ட்ஸினின் அறுவைச் சிகிச்சைக்குப் பிறகு அவரைச் சந்திக்கும் முதலாவது சுதந்திர கொமன் வெல்த் சாராத தலைவர் லீபெங் ஆவர்.

இருதரப்பு வர்த்தகத்தை மேலும் மேம்படுத்துவதே சீனப் பிரதமரின் விஜயம் என ரஷ்ய அதிகாரிகள் தெரிவித்தனர் (இ-10)

## மலேசியாவில் புயல், வெள்ளம்; 100 க்கும் மேற்பட்டோர் பலி!

கோலாலம்பூர், டிச. 28

மலேசியாவில் கடந்த புதனன்று வீசிய புயலில் குறைந்தது 100 பேர் இறந்தனர். 100 - க்கும் மேற்பட்டோர் காணாமற் போயுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இதுவரை 88 சடலங்கள் மீட்கப்பட்டுள்ளன. இறந்தவர்களின் எண்ணிக்கை மேலும் அதிகரிக்கலாம் என அஞ்சப்படுகிறது.

அதிகமாகப் பாதிக்கப்பட்டுள்ள சபா மாகாணத்தில் ஆற்று நீரில் மிதந்த அல்லது இடிபாடுகளுக்குள் இருந்த 78 சடலங்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

9 கிராமங்களில் சுமார் 500 வீடுகள் அடித்துச் செல்லப்பட்டுள்ளன. (இ-10)

கங்கை ஆற்று நீர் ஒப்பந்தம்:

# பங்களாதேஷுக்கு சீன அரசு பாராட்டு

கங்கை ஆற்று நீரைப் பகிர்ந்து கொள்வது தொடர்பாக இந்தியாவுக்கும் பங்களாதேஷுக்கும் இடையே கைச்சாத்தான ஒப்பந்தம் வரலாற்றுச் சிறப்புமிக்கது என சீனா பாராட்டியுள்ளது.

அமைதியான பேச்சுவார்த்தைகள் மூலம் இரு தரப்பு பிரச்சினைகளையும் தீர்ப்பது என்ற கொள்கையின் அடிப்படையில் இந்தப் பிரச்சினையை இரு நாடுகளும் தீர்த்துக் கொண்டது குறித்து மகிழ்ச்சி அடைவதாக சீனா தெரிவித்துள்ளது.

உடன்படிக்கையில் கையொப்பமிட்டதற்காக அமெரிக்கா, கனடா மற்றும் பல்வேறு நாடுகள் பங்களாதேஷைப் பாராட்டியுள்ளன. (இ-10)

## போதைவஸ்துக் கடத்தலின் கேந்திரமாக கொலம்பியா

வாஷிங்டன், டிச. 28

அமெரிக்காவிற்கு கஞ்சா போன்ற போதைப் பொருட்களைக் கள்ளத்தனமாகக் கடத்திவரும் கும்பல்களின் கேந்திரமாக கொலம்பியா மாறிவருகிறது என அமெரிக்க போதைப் பொருள் தடுப்பு உளவுப்பிரிவு அறிக்கை தெரிவிக்கிறது.

ஒருகிலோ ஹெரோய்ன் போதைப் பொருள் அமெரிக்கா வந்தடையும் போது அதன் விலை சுமார் 60 இலட்சம் ரூபா ஆகும்.

1990 ஆம் ஆண்டின் தொடக்கத்தில் பர்மாநாட்டு குன்ஷா என்பவர் அமெரிக்கப் போதைப் பொருள் சந்தையைக் கட்டுப்படுத்தி வந்தார். ஆனால் தற்போது லத்தீன் அமெரிக்கக் குழுக்கள் மேலாண்மை பெற்றுள்ளன என்று தெரிவிக்கப்படுகிறது. (இ-10)

## உலக அரங்கில்

## காங்கிரஸுக்கு கூட்டுத்தலைமை

புதுடில்லி, டிச. 28

இன்றைய அரசியல் நிலைமையில் காங்கிரஸ் கட்சிக்கு கூட்டுத்தலைமையே பொருத்தமானது ஆகும்.

காங்கிரஸ் கட்சியின் மூத்த தலைவர்களில் ஒருவரான ராஜேஸ் பைலட் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ஜவஹர்லால் நேரு, இந்திராகாந்தி போன்றோரின் காலங்கள் முடிந்துபோய்விட்டன. நாடு முழுவதும் அதிகாரம் செலுத்துகின்ற மதிப்புமிக்கத் தலைவர்கள் எவரும் இன்று கட்சியில் இல்லை. எனவே பிராந்தியங்களின் பல்வேறு தலைவர்களும் இணைந்து அதிகாரக் கூட்டமைப்பை ஏற்படுத்த வேண்டும் என்றும் அவர் கூறினார். (இ-5)

## 2 வாக்குகளால் தோல்வி

காட்மண்டு, டிச. 28

நேபாளத்தில் ஷேர்பஹதூர் துவாவின் அரசுக்கு எதிராக, அந்நாட்டு எதிர்க்கட்சிகள் கொண்டுவந்த நம்பிக்கையில்லாத் தீர்மானம் இரண்டு வாக்குகள் வித்தியாசத்தில் தோற்றுப்போனது.

தீர்மானத்துக்கு ஆதரவாக 101 வாக்குகள் கிடைத்தன. நேபாள அரசமைப்புச் சாசனத்தின்படி 205 உறுப்பினர்களைக் கொண்ட மக்கள் அவையில் தீர்மானம்வெற்றி பெறுவதற்கு 103 வாக்குகள் தேவை. (அ-3)

## பெத்லஹேமில் யாஸிர் அரபாத்

பாலஸ்தீன அதிபர் யாஸிர் அரபாத் நத்தார் தினத்தன்று யேசுவின் பிறப்பிடமான பெத்லஹேம் நகருக்குத் தமது மனைவியுடன் சென்றிருந்தார்.

இஸ்ரேலியப் பிரதமர் பெஞ்சமின் நத்தனியாகுவுடன் காஸாவில் பேச்சுவார்த்தைகளை நடத்திய பலஸ்தீன அதிபர் யாஸிர் அரபாத் அங்கிருந்து நேராக பெத்லஹேமுக்குச் சென்றார். அரபாத்தின் மனைவி யுகா கிறிஸ்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

## 68 கிலோ தங்கம் கடத்த முயற்சி

புதுடில்லி, டிச. 28

நேபாள இந்திய எல்லை ஊடாக இந்தியாவுக்குள் தங்கம் கடத்த முயன்ற ஒரு கும்பல் பிடிபட்டது.

சுமார் 68 கிலோ தங்கம் வருமான வரி உளவுத்துறை அதிகாரிகளால் கடந்த வியாழனன்று கைப்பற்றப்பட்டது.

வலிகாமம் மேற்கு

# தொழிற் பயிற்சி நிலையங்களை மீண்டும்இயங்கவைக்கநடவடிக்கை

அராலி, டிச. 28

வலிகாமம் மேற்கு பிரதேசத்தில் அரசாங்கத்தால் நடத்தப்பட்டு தற்போது இயங்காது இருக்கும் சகல தொழிற் பயிற்சி நிலையங்களையும் மீள இயக்குவதற்கு பிரதேச செயலாளர் கா.சந்திரராசா நடவடிக்கை எடுத்துள்ளார்.

சித்தன்கேணி மாதர் அபிவிருத்தி சங்கத்தில் நடத்தப்பட்ட தையல் பயிற்சி நிலையம் மீள ஆரம்பிக்கப்பட்டு 19 பயிற்சியாளர்கள் பயிற்சி பெற்று வருகின்றார்கள்.

கைத்தறி நெசவு பயிற்சி சுழிபுரம் மத்தி கிராம அபிவிருத்தி சங்க கட்டடத்திலும் —

தென்னம் தும்பு கயிற்று தொழிற்சாலை, அராலிமத்தி கிராவோலை கிராம அபிவிருத்தி சங்க கட்டடத்திலும் —

பனம் பொருள் கைத்தொழில் பயிற்சி நிலையம், அராலி மேற்கு கிராம அபிவிருத்தி சங்க கட்டடத்திலும் ஆரம்பிக்கப்பட உள்ளன.

இவற்றை உடனடியாக ஆரம்பிக்குமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு பணிப்பு வழங்கப்பட்டுள்ளது. (இ-12)

சட்டப்படி வேலை நிறுத்தத்தால்

## மருந்து வகைகளுக்கு தட்டுப்பாடு ஏற்படலாம்

கொழும்பு, டிச. 28

உப மருத்துவ ஊழியர்கள் மேற்கொண்டுவரும் சட்டப்படியான வேலை நிறுத்தம் காரணமாக அடுத்த வருடத்தில் முதல் ஆறு மாதங்களுக்கு மருந்து வகைகளுக்கு பெரும் தட்டுப்பாடு ஏற்படலாம் என்று அஞ்சப்படுகிறது.

உப மருத்துவ ஊழியர்கள் சேவையின் கீழ் வரும் 'பார்மஸி'மார் வழமையாக அடுத்த வருடத்துக்கு தேவையான மருந்து வகைகளையும்—

மருத்துவ தொடர்பான ஏனைய பொருள்களையும்— 4 மாதத்துக்கு முன்பே பட்டியல் இட்டு தயாரித்து விடுவார்கள்.

இவ்வாண்டு அவர்கள் மேற்கொண்டுவரும் சட்டப்படி வேலை நிறுத்தம் காரணமாக அந்தப்பட்டியல் தயாரிக்கப்படவில்லை; அத்துடன் மருந்து வகைகள் இறக்குமதி செய்யப்படவும் இல்லை.

இதன் காரணமாகவே அடுத்த ஆண்டு முதல் ஆறு மாதங்களுக்கு அரச ஆஸ்பத்திரிகள், மற்றும் 'ஒசுசல' நிறுவனங்களில் மருந்துக்கு கடும்தட்டுப்பாடு ஏற்படலாம் எனத்தெரிவிக்கப்படுகிறது.

## தமிழ் அமைப்புகள் மீது குற்றச்சாட்டு

கொழும்பு, டிச. 28

'கிழக்கில் பெருமளவில் சிங்களவர்கள் வசிக்கும் திருகோணமலையில் சிங்களவர்களின் உரிமைகளைப் பறிக்க தமிழ் அமைப்புகளின் ஒத்துழைப்புடன் சதி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன''

இப்படி ''திவயின'' சிங்கள வார இதழ் தெரிவிக்கின்றது.

தேசிய ஒற்றுமை பற்றி அடிக்கடி பேசிக்கொண்டு ஜனநாயக அரசியல் வழிமுறைக்கு ஒத்துழைப்பு வழங்குவதாகக் கூறும் தமிழ் அமைப்புக்கள் இத்தகைய சதி முயற்சிகளில் ஈடுபட்டுள்ளது குறித்து திருமலை சிங்களவர்கள் கவலை தெரிவித்துள்ளனர் என்றும் அவ்விதழ் தெரிவிக்கிறது. (இ-10)

பயங்கரவாதம் பற்றிய பிரகடனம்:

# இலங்கையால் தெரிவிக்கப்பட்ட யோசனைகளும் ஆவணத்தில்

## லக்ஷ்மன் கதிர்காமர் தெரிவிப்பு

''பயங்கரவாதத்தை ஒழிப்பதற்கான நடவடிக்கைகள் பற்றிய பிரகடனம் ஐ. நா. வினால் ஏகமனதாக ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. இலங்கை தெரிவித்த சகல யோசனைகளும் இந்த ஆவணத்தில் அடங்கியுள்ளன''.

வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இன்ரனட் போன்ற எலெக்ரோனிக் முறையையும், தகவல் முறையையும் பயங்கரவாத ஸ்தாபனங்கள் பயங்கரவாதச் செயல்களை மேற்கொள்ள பயன்படுத்துவது தடுக்கப்பட வேண்டும் என்றும் —

பொது வசதிகள் அமைப்புக்கள் மீது பயங்கரவாதிகள் தாக்குதல் நடத்துவதைத் தடுப்பதிலும், விசாரணை நடத்துவதிலும், பதிலடி கொடுப்பதிலும் அரசாங்கங்களுக்கிடையிலான ஆற்றலை பலப்படுத்துமுகமாக பாதுகாப்புத்துறை அதிகாரிகள் மத்தியில் மேலும் கூடுதலான அளவு கலந்தாலோசனைகள் நடத்த வேண்டும் என்றும் – பிரகடனம் மேலும் வலியுறுத்தியுள்ளது.

## வெள்ள நிவாரணத்துக்கு ரூபா 90 லட்சம்

1993 ஆம் ஆண்டு வெள்ளத்தினால் ஏற்பட்ட அழிவுக்காக நிவாரணம் வழங்கிய ப. நோ. கூ. சங்கங்களுக்கான கொடுப்பனவுக்காக 90 லட்சம் ரூபா செயலகத்துக்கு வந்து சேர்ந்துள்ளது.

சம்பந்தப்பட்ட நிவாரணத்தை வழங்கிய ப. நோ. கூ. சங்கங்கள் தமது கொடுப்பனவை செயலகத்தில் பெறுமாறு அரச அதிபர் கேட்டுள்ளார். (இ-3)

## குழாய்க் கிணறு பாவிக்க முடியாத நிலையில்

சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் அமைக்கப்பட்ட இரண்டு குழாய்க் கிணறுகள் நோயாளர்கள் பயன்படுத்த முடியாத நிலையில் காணப்படுகின்றன.

ஆஸ்பத்திரிக்கு அருகில் அமைக்கப்பட்ட குழாய்க் கிணறு - வெட்டப்பட்ட பள்ளம் இன்னமும் மூடப்படாததாலும்—

ஆஸ்பத்திரியின் பின்பக்கத்தில் அமைக்கப்பட்ட மற்றொரு குழாய்க் கிணறு பாவிக்கமுடியாத நிலையில் பூட்டுப் போடப்பட்டுள்ளதாலும்— நோயாளர்கள் இக் கிணறுகளைப் பாவிக்க முடியாதநிலை ஏற்பட்டுள்ளது. (இ-117)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்குண்டு

நல்ல நிலையிலுள்ள இற்றாலியன் சுப்பர் வெஸ்பா ஸ்கூட்டர் விற்பனைக்கு உண்டு. தொடர்பு:- திருவள்ளுவர் அச்சகம், 593, பருத்தித்துறை வீதி, நல்லூர். (44334)

### தவறிவிட்டது

வல்லி சறோஜாவின் 586352580 V இலக்க அடையாள அட்டை யாழ்ப்பாணத்தில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து தொடர்புகொள்ளவும். 'பார்வதி பவனம்' உரும்பிராய் மேற்கு, உரும்பிராய். சன்மானம் வழங்கப்படும். (44339)

சின்னத்தம்பி சதாசிவம் ஆகிய எனது 360991812V இலக்க தேசிய அடையாள அட்டை தட்டாதெருச் சந்திக்கும் பிறவுண் வீதிக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து ஒப்படைக்கவும். ஆறுமுகம் றெக்ஸ்ரைல்ஸ், இல. 20, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். (44356)

### தவறவிடப்பட்ட மாடு

தவறவிடப்பட்ட ஒரு பசுமாடு 40, பேரின்பநாயகம் லேன், கண்டிறோட் என்னும் விலாசத்தில் பல நாள்களாக உரிமை கோரப்படாமல் நிற்கிறது. உரியவர் அடையாளங்காட்டிப் பெற்றுக்கொள்ளவும். சக்திவேல். (9117)

கொட்டடி, சிவன் பண்ணை வீதியைச் சேர்ந்த இராஜேஸ்வரன் சாந்தகுமாரியின் 645723686 V இலக்க தேசிய அடையாள அட்டை தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து இல. 16/1, இரண்டாம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் ஒப்படைக்கவும். (44357)

### இலவச திருமண சேவை

அரசாங்க உத்தியோகத்தர்கள், ஸ்தாபன உரிமையாளர்கள், பட்டதாரி மணப்பெண்கள், வெளிநாட்டு மணமக்கள் ஆகியோரின் குறிப்புக்கள் உண்டு. ஞாயிறு மட்டும் 9.30 — 12.30. ஸ்ரீலங்கா அச்சக ஒழுங்கை, யாழ்ப்பாணம். (44343)

### சோதிடம்

பரீட்சையில் சித்தி உண்டா? தொழில் கிடைக்குமா? வெளியூர்ப்பிரயாணம் உண்டா? காதல் திருமணம் நன்மை தருமா? எதிர்கால வெற்றிகள் தோல்விகள் பற்றிய உங்கள் குறிப்பு பலன் ஆராய ஸ்ரீமாவை விநாயகர்சோதிட நிலையம், இல.158, கோயில் வீதி, முடமாவடி, நல்லூர், யாழ்ப்பாணம். (44338)

## புதிய உயர்கல்லூரி

ஆரியகுளம் சந்தி, யாழ்.

(கலை, வர்த்தகம்)

**99 A/L**

**ஆரம்பம்:**
**04 - 01 - 97**
(8 மணி)

**98 A/L**

புதிய பிரிவு

**ஆரம்பம்:**
**28 - 12 - 96**

நிர்வாகி
S. அருள்நங்கை

(44328)

### தபால் மூலம் கணிதம்

ஆண்டு 6 - 11 வரை கணிதம், அனுபவம் மிகுந்த ஆசிரியரினால் அடிப்படையில் இருந்து கற்பிக்கப்படும். கடித மூலம் தொடர்பு கொள்ளவும். திருமதி சி. குலசேகரம், சுழிபுரம் வடக்கு, சுழிபுரம். (9118)

### வினாத்தாள்கள்

அண்மையில் அரசாங்கத்தால் நடத்தப்பெற்ற O/L English வினாத்தாள்கள் எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம். பாடசாலைகளுக்கு விசேட கழிவு. Bond, யாழ்ப்பாணம். (44350)

### மணப்பெண் தேவை

வவுனியாவில் சொந்தமாக கடை வைத்திருப்பவர். நட்சத்திரம் பூரம். வயது 36. இந்து மகனுக்கு நல்ல குணமுள்ள மணமகள் தேவை. தொடர்பு: நந்தகோபன், மல்லாகம் மகா வித்தியாலயம், மல்லாகம். (9105)

இந்து, 31 வயது, செவ்வாய் குற்றமற்ற, இங்கிலாந்திலுள்ள மணமகனுக்கு மணமகள் தேவை. (இங்கிலாந்தில் உள்ளவர் விரும்பத்தக்கது) ''சேவை நம்பகம்'' விவாக சேவை, யாழ். வீதி, சிறாம்பியடி, யாழ்ப்பாணம். ''சகல மணமக்களின் பெற்றோரும் எமது சேவையில் இணைவது விரைவான திருமணங்களுக்கான வழியாகின்றது.'' (44348)

## நவீல்ட் பாடசாலை ஆரம்பம்

கைதடி நவீல்ட் செவிப்புலன் விழிப்புலன் இழந்தோர் பாடசாலை புது வருடத்திற்காக **06-01-97** திங்கட்கிழமை ஆரம்பமாகும். சகல மாணவர்களையும் அன்று சமுகம் அளிக்கும்படி வேண்டுகிறோம்.

புதிய மாணவர்கள் அனுமதியும் அதே தினம் இடம்பெறும்.

**-- அதிபர்.**

(சி-3789)

## ஆண்டு 5 மாணவர்களுக்கு ஒரு நற்செய்தி

புலமைப் பரிசில் பரீட்சைக்கான பயிற்சிப் பரீட்சை ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் பி. ப 2 மணிக்கு நடைபெறுகின்றது.

### றேடியன்ற் கல்வி நிலையம்

கச்சேரி கிழக்கு ஒழுங்கை.

பாடசாலைகளும், தனியார் கல்வி நிறுவனங்களும் தமக்குத் தேவையான வினர்த்தாள்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

தொகுப்பு:-
**பா. கிருபாகரன்**
(விசேட பயிற்சி, கணிதம்) [44352]

## 45ஆம் நாள் அந்தியேட்டியும் நினைவஞ்சலியும்

**(28 - 12 - 96)**



சிவபதம் எய்திய

## செல்வி இ. திலகராணி

(கோப்பாய் தெற்கு)

தோற்றம்: **13 - 02 - 1975**

மறைவு: **14 - 11 - 1996**

மறைவு பெற்று இறைவனடி சேர்ந்த நாள்கள்
நாற்பத் தைந்தானாலும்
நினைவுடனே எந்நாளும் மறவாத அன்பு கொண்டு
வாழ்த்துகின்ற போற்றுகின்ற
எம்மவர்கள் உள்ளக் கோயிலில் வாழ்ந்திருக்கும்
– உத்தமியே!

உன் நாமம் என்றும் வாழி வாழி!

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

அன்னாரின் பெயரால் எமது இல்லத்தில் இன்று நடைபெறும் ஏனைய நிகழ்வுகளிலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் வேண்டுகிறோம்.

எம். கே. இளையப்ப J. P.,
குடும்பத்தினர்.

குமரகிரி, கோப்பாய். (44337)

## முக்கிய அறிவித்தல்

# ஆர். வி. ஜி பீடிகள்

**R. V. G BEEDIES**

எமது ஸ்தாபனத்தில் மீண்டும் வேலை தொடங்குவதால் பீடி சுற்றுவிக்கும் கிளை முகாமையாளர்கள், பீடி - கட்டு, பண்டல் ஒட்டுனர்களை நேரில் சமுகம் தரும்படி கேட்டுக் கொள்கிறோம்.

நிர்வாகம்

## ஆர். வி. ஜி பீடி ஸ்தாபனம்

58, நல்லூர் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம்.

(44358)

## விக்னா கல்வி நிறுவனம்

52, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

**99 A/L**

**ஆரம்பம்: 05-01-1997 காலை 9-00 மணி**

| | | |
|---|---|---|
| பொருளியல் | — | திரு. விக்கி |
| கணக்கியல் | — | திரு. பாலவாசன் |
| வர்த்தகம் | — | திரு. தரன் |
| புள்ளி விவரவியல் | — | திரு. திரிகரன் |
| அளவையியல் | — | திரு. மனோ |
| இந்து நாகரிகம்<br>இந்து சமயம் | ] | திரு. காரை. சுந்தரம்பிள்ளை |
| தமிழ் | — | திரு. திருஞானம் |
| புவியியல் | — | பிரபல ஆசிரியர் |
| வரலாறு | — | திரு. பிரகலாதன் |
| நாடகமும்–<br>அரங்கியலும் | — | திரு. சத்தியா |

(44360)

## பெட்டா எசன்ஸ் சப்பிளையர்ஸ்

**PETTAH ESSENCE SUPPLIERS**

★ சகல விதமான கேக் தயாரிப்புப் பொருள்கள்
★ ஐசிங் பொருள்கள்
★ எசன்ஸ் வகைகள்
★ எமல்சன் வகைகள்
★ கலர் பவுடர் வகைகள்

மொத்தமாகவும் சில்லறையாகவும் எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்.

**பெட்டா எசன்ஸ் சப்பிளையர்ஸ்,**
333, நாவலர் றோட், யாழ்ப்பாணம்.
(இலுப்பையடிச் சந்திக்கும், றெயில்வே கடவைக்கும் இடையில்) (44341)

## முதலாம் வருட நினைவஞ்சலி

அன்னை மடியில்: **09 — 07 — 1929**



ஆண்டவன்: அடியில் **28 — 12 — 1995**

## அமரர் A. R. ராஜா (Rajoo)

(ஓய்வு பெற்ற உதவி மதுவரி ஆணையாளர், வடபிராந்தியம்)

அன்புத் துணைவரே, ஆசைத்தந்தையே!
என்றும் எம் மழலை கேட்டு
இன்புற்ற இனிய தாத்தா!
ஆண்டொன்று கழிந்தாலும்
உன் நினைவு அகலாதே.
விண்ணுலகில் சாந்தி பெற
எந்நாளும் இறைவனிடம் வேண்டிடுவோம்.

என்றும் உம் நினைவு மாறாத:
**அன்பு மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**

43, கச்சாய் வீதி
சாவகச்சேரி. (44359)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணம்

# உதயன்

## புதிய முயற்சி

அபிவிருத்தி வேலைகளைச் செய்வதற்கென வழமையாகக் கிடைக்கும் பன்முகப்படுத்தப்பட்ட நிதி மற்றும் மூலதன நிதி வகைகளால், அடுத்த வருடத்துக்கென யாழ்ப்பாண மாவட்டத்துக்கு மூன்று கோடியே எழுபது லட்சம் ரூபா கிடைத்திருக்கிறது.

போரினால் சிதைந்து போயிருக்கும் யாழ்ப்பாணக் குடாநாட்டை அபிவிருத்தி செய்வதற்குக் கோடானு கோடி ரூபா தேவைப்படும். குடாநாட்டு மக்களின் வாழ்க்கை நிலையை முன்னேற்றுவதற்கான அத்தியாவசியமான வளர்ச்சிப் பணிகளைச் செய்வதற்கே ஆயிரக் கணக்கான கோடி ரூபா பணம் வேண்டும்.

ஆகையால் குடாநாட்டின் அபிவிருத்திப் பணிகளுக்கெனக் கிடைத்திருக்கும் 3 கோடி 70 லட்சம் ரூபா நிச்சயமாக யானைப் பசிக்குத் தரப்படும் சோளப் பொரியே!

எனினும் கிடைத்த பணத்தை பயன்தரக் கூடிய திட்டங்களுக்குச் செலவிடுவதில் கவனமாகவும், விழிப்பாகவும் இருக்க வேண்டும். நலிந்து போயுள்ள குடாநாட்டு மக்களின் வாழ்க்கை நிலையை முன்னேற்றுவதற்கான அவசர, அத்தியாவசியத் தேவைகளை இனங்காணுவதும் நிறைவேற்றுவதும் முக்கியம்.

தங்களுக்கு அவசியமாகத் தேவைப்படும் பணிகளை அந்தந்தப் பகுதி மக்களாலும் சம்பந்தப்பட்ட பகுதியில் உள்ள பொது நல ஸ்தாபனங்களாலுமே இலகுவில் இனங்காணமுடியும்.

அலுவலகங்களில் உள்ள அதிகாரிகள் மக்கள் கஷ்டங்களை இலகுவில் உணர்வதில்லை. மக்கள் மீதான அக்கறையும் அவர்களுக்குக் குறைவு. மக்களின் தேவைகளையும், அவர்களுக்குக் கிடைக்கூடிய வளங்களையும் கவனத்தில் எடுக்காது, தாம் பாடசாலையிலும், பல்கலைக்கழகத்திலும் படித்த சில மாதிரிகளை அல்லது உதாரணங்களை மையப்படுத்தியே திட்டங்களை வரைகிறார்கள்.

அதனால் பெருந்தொகை அரச பணத்தைச் செலவிட்டு மேற் கொள்ளப்படும் பல திட்டங்கள் மக்களுக்கு உரிய பயனைத் தருவதில்லை. ஆகையால் அபிவிருத்தித் திட்டங்கள் மக்களின் ஆலோசனைகளைப் பெற்று, அவர்களின் தேவையைக் கருதி வகுக்கப்படுவதே பொருத்தம். அதுவே செலவிடும் பணத்துக்குப் பெறுமதியான நற்பயனைத் தரும்.

இதனை நன்குணர்ந்து, அபிவிருத்தித் திட்டங்களுக்கான ஆலோசனைகளை வழங்குமாறு அரச அதிபர் செ. பத்மநாதன் கேட்டுள்ளார். தாங்கள் அதிகாரிகள் என்பதால் தமக்கே எல்லாம் தெரியும் என்ற தற்பெருமையைத் தவிர்த்து மக்களிடம் ஆலோசனை கேட்கும் இந்தப் புதிய முயற்சி வரவேற்கத் தக்கது.

இதன் மூலம் மக்களுக்கும் அதிகாரிகளுக்கும் இடையில் உள்ள பெரிய இடைவெளியைக் குறைக்கலாம். மக்களின் வேண்டாத பிரச்சினைகளைக் களையவும் இந்த நடைமுறை பெரிதும் உதவும்.

இதேவேளை, ஆலோசனை வழங்கும் மக்கள் தமது சொந்த நலனை சித்தத்தில் இருத்திச் செயற்படாமல், பலரும் பயன் பெறும் அம்சங்களை மையமாகக் கொண்டு தமது ஆலோசனைகளைத் தெரிவிப்பது முக்கியமாகும்.

# 5 ஆம் ஆண்டு புலமைப்பரீட்சைக்கு பதிலாக வேறொரு போட்டிப் பரீட்சை

## கல்வி அமைச்சு ஆலோசிக்கிறது

கொழும்பு, டிச. 28

பிரபல பாடசாலைகளில் மாணவர்களைச் சேர்த்துக் கொள்வதற்குப் போட்டிப் பரீட்சையாக அமைந்துள்ள 5 ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையை ரத்துச் செய்துவிட்டு அதற்குப் பதிலாக வேறொரு போட்டிப் பரீட்சையை நடத்துவது குறித்து கல்வி உயர் கல்வி அமைச்சு ஆலோசித்து வருகிறது.

தற்போதைய புலமைப் பரிசில் பரீட்சைக்குப் பதிலாக மாகாண கல்வி அமைச்சின் மேற்பார்வையின் கீழ் பாடசாலை மட்டத்தில் பரீட்சை ஒன்றை நடத்தி சிறந்த மாணவர்களைத் தெரிவு செய்து, அவர்களுள் வறிய மாணவர்களுக்கு உதவி வழங்கும் முறை ஒன்றினை அறிமுகப்படுத்துவதில் கல்வி, உயர்கல்வி அமைச்சு கவனம் செலுத்தி வருகிறது.

தேசியக்கல்விக் குழுவின் அனுமதியுடனும், கல்விமான்களால் முன்வைக்கப்பட்ட கருத்துக்களைக் கவனத்தில் கொண்டும் மேலே குறிப்பிட்டவாறு நடவடிக்கை எடுப்பதற்கு அமைச்சு கவனம் செலுத்தியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

5 ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சை பிரபல பாடசாலைகளுக்கு மாணவர்களைச் சேர்த்துக் கொள்ளும் போட்டிப் பரீட்சையாகப் பெற்றோரினால் கருதப்பட்டுள்ளதால், மிகவும் இளம் வயதிலேயே குழந்தைகளின் சுதந்திரம் பறிக்கப்படுவதாக கல்விமான்கள் கருத்துத் தெரிவித்துள்ளனர். (இ-5)

# நத்தார் விழாவில் நூல் வெளியீடு

யாழ்ப்பாணம், டிச. 28

திருமறைக் கலாமன்றத்தினரின் நத்தார் விழா இன்றும் நாளையும் மன்ற அரங்கில் புதிய நேரப்படி பி. ப. 4.30 மணிக்கு ஆரம்பமாகும்.

நாட்டுக் கூத்து, நாடக,ம் கிறிஸ்மஸ் கானங்கள் ஆகியன இரண்டு நாள்களும் முக்கிய நிகழ்வுகளாக அமையும்.

நாளைய சிறப்பு நிகழ்ச்சியாக ''கிறிஸ்து காவியம்'' என்னும் நூலின் வெளியீட்டு விழா இடம்பெறும்.

நூல் வெளியீட்டு நிகழ்வுக்கு மறைவட்ட பரிபாலகர் அருட்திரு. ஜே. பி. ஈ. செல்வராஜா தலைமை வகிப்பார்.

அறிமுக உரையை எஸ். ஏ. அழகராஜாவும் ஆய்வுவுரையை எஸ். எஸ். தங்கராஜாவும் நிகழ்த்துவர். (அ)

# கொழும்பு வந்துள்ள விடுதலைப் புலிகள் பிரமுகர்

## பொலீஸார் கைது செய்துள்ளனராம்

கொழும்பு, டிச. 28

விடுதலைப் புலிகளின் சர்வதேச நிதி விவகாரங்களுக்குப் பொறுப்பானவர் எனச் சந்தேகிக்கப்படும் சிவா என்பவர் கொழும்பு வந்துள்ளார் என 'த ஐலண்ட்' பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

கடந்த 24 ஆம் திகதி மத்திய கிழக்கு நாடான சவூதி அரேபியாவில் இருந்து விமான மூலம் புறப்பட்ட இவர் கொழும்பு விமான நிலையத்தில் வைத்து கைது செய்யப்பட்டாரா? அல்லது பின்னர் கைது செய்யப்பட்டாரா? என்பது ஊர்ஜிதம் செய்யப்படவில்லை என்றும் —

ஆனால் இவர் மீதான விசாரணைகள் நடைபெறுவதைப் பொலீஸார் ஊர்ஜிதம் செய்துள்ளனர் என்றும் அச்செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பாதுகாப்புக் காரணங்களுக்காக மேலும் விபரங்களை வெளியிட பொலீஸார் மறுத்து விட்டனர்.

வெளிநாட்டில் இவர் உல்லாசக் ஹோட்டல் ஒன்றை நடத்தி வந்தார் எனவும் தெரிவிக்கப்பட்டது. (இ- 3- 150)

# நல்லெண்ணெய் கலப்படம்

அராலி, டிச. 28

சங்கானையில் பாவனைக்கு உதவாத கலப்படம் செய்யப்பட்ட நல்லெண்ணெய் சுகாதாரவைத்திய அதிகாரி பணிமனை உத்தியோகத்தர்களால் கைப்பற்றப்பட்டுள்ளது.

சங்கானை பட்டினப்பகுதியில் உள்ள வியாபார நிலையங்களில் விற்பனைக்காக வைக்கப்பட்டிருந்த நல்லெண்ணெயில் 13 மாதிரிகளை எடுத்து பரிசோதனை செய்தபோது 6 மாதிரிகள் மனித நுகர்வுக்கு ஒவ்வாத வகையில் கலப்படம் செய்யப்பட்டிருந்தது கண்டுபிடிக்கப்பட்டது.

மேற்படி எண்ணெயை உற்பத்தி செய்து விற்பனைக்கு விட்டவர்களுக்கு எதிராகக் கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என இந்த நடவடிக்கையில் ஈடுபட்ட அராலி, சுழிபுரம், பண்டத்தரிப்பு பொது சுகாதார பரிசோதகர்கள் தெரிவித்தனர்.

மேலும் இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட ''இதயம்'' எண்ணெயில் கூட கலப்படம் செய்யப்பட்டது கண்டுபிடிக்கப்பட்டது. [இ-12]

# தோட்டப்பகுதியில் தமிழ் இளைஞர் கைது!

பதுளை, டிச. 28

மடுல்சீமையைச் சேர்ந்த குருவிக்கொல்லை தோட்டத்தில் விடுதலைப் புலி உறுப்பினர் எனக் கருதப்படும் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இவர் தொடர்பாக புலன் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்றும் —

விசாரணைகள் முடிவுற்றதும் நீதிமன்றத்தில் அவர் ஆஜர் செய்யப்படுவார் எனவும் — ஊவா மாகாண பிரதிப் பொலீஸ் மா அதிபர் தெரிவித்துள்ளார்.

தற்போது தோட்டப் புறங்களில் விடுதலைப் புலிகளின் வீடியோ கெசட்டுகள் காண்பிக்கப்பட்டு வருவதாக எமக்குத் தகவல்கள் கிடைத்து வருகின்றன.

விடுதலைப் புலிகள் எந்த வகையிலும் தோட்டப் பகுதிகளுக்குள் ஊடுருவுவதைத் தடுக்கும் வகையில் தேடுதல், பரிசோதனைகளை மேற்கொள்ளுமாறு ஊவா மாகாணத்திலுள்ள சகல பொலீஸ் நிலையங்களுக்கும் பணிப்புரை வழங்கியுள்ளேன் என பிரதிப் பொலீஸ் மா அதிபர் மேலும் தெரிவித்தார்.

உள்ளூராட்சித் தேர்தலில்

# ஜனநாயக ஐக்கியதேசிய முன்னணி தனித்துப் போட்டியிடுவதற்கு முடிவு

கொழும்பு, டிச. 28

ஆரியவன்ஸ திஸநாயக்கா தலைமையிலான ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணி எதிர்வரும் உள்ளூராட்சித் தேர்தல்களில் எந்தக் கட்சியுடனும் கூட்டுச் சேராது தனித்துப் போட்டியிடும்.

தமது கட்சி பெரும் எண்ணிக்கையான இளைஞர்களை வேட்பாளர்களாக நிறுத்த இருப்பதாக ஆரியவன்ஸ திஸநாயக்க தெரிவித்துள்ளார்.

இந்தக் கட்சி அதன் கழுகுச் சின்னத்தில் யாழ்ப்பாணம், வன்னி உட்பட சகல மாவட்டங்களிலும் வேட்பாளர்களை நிறுத்த உள்ளது.

ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியில் இரு பிரிவுகள் இருப்பதும் —

அமைச்சர் ஸ்ரீமானி தலைமையிலான லலித் பிரிவுக்கு வாத்துச் சின்னமும் —

ஆரியவன்ஸ திஸநாயக்கா தலைமையிலான ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணிக்கு கழுகுச் சின்னமும் வழங்கப்பட்டுள்ளதும் — தெரிந்ததே.

உள்ளூராட்சித் தேர்தலில் தனித்துப் போட்டியிடுவதா? அல்லது பொதுமக்கள் ஐக்கிய முன்னணியின் பொது வேட்பாளர் பட்டியலில் இணைந்து போட்டியிடுவதா? என்பது குறித்து ஸ்ரீமானி தலைமையிலான ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணி இன்னும் முடிவு செய்யவில்லை. (இ-3)

# திருவாசக முற்றோதல்

கொழும்புத்துறை, டிச. 28

யாழ். நாயன்மார்கட்டு ஸ்ரீ அரசடிப் பிள்ளையார் ஆலயத்தில் இன்று காலை 6 மணி முதல் திருவாசகம் முற்றோதல் விழா நடைபெறும். இம் முற்றோதல் விழாவுக்கு ஆலய ஆதீன கர்த்தா சிவஸ்ரீ ச. மகேஸ்வரக் குருக்கள் தலைமை வகிப்பார். (அ-30)

# கொழும்பு துறைமுகத்தில் அடையாள வேலை நிறுத்தம்

கொழும்பு, டிச. 28

கொழும்பு துறைமுகத்தில் எலிஸபெத் இறங்குதுறையை ''பி அன்ட் ஓ'' நிறுவனத்துக்கு குத்தகைக்கு வழங்குவதென்ற யோசனையை ஆட்சேபித்து இலங்கை துறைமுக அதிகாரசபை ஊழியர்கள் நேற்றுக் காலை அடையாள வேலை நிறுத்தம் ஒன்றை நடத்தினர்.

எனினும் இந்த அடையாள வேலை நிறுத்தத்தினால் துறைமுகத்தில் அத்தியாவசிய சேவைகள் பாதிக்கப்படவில்லை என்று துறைமுக அதிகார சபை தெரிவித்தது.

கொள்கலன் இறங்குதுறையில் வேலைகள் தடையின்றி நடைபெற்றன.

ஊழியர்களின் விடுமுறைகள் யாவும் ரத்துச் செய்யப்பட்டுள்ளன என துறைமுகங்கள், கப்பல் துறை அமைச்சு தெரிவித்தது.

''எலிசபெத் இறங்குதுறையை குத்தகைக்கு விடுவது தொடர்பாக இதுவரை எந்தவித முடிவும் எடுக்கப்படவில்லை'' என்று கப்பல் துறை அமைச்சர் அஷ்ரப் தெரிவித்தார். (இ-3)

## நாளை

**மார்கழி 14**

ஞாயிற்றுக்கிழமை

**திதி:** சதுர்த்தி முற்பகல் 9.40 வரை.

**நட்சத்திரம்:** மகம் முழுவதும்

**ராகுகாலம்:** 4.59 - 6.29

[illegible]

(பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப்படி)

# 25 பாடசாலை அதிபர்கள் பயிற்சிக்கு இந்தியா பயணம்

வவுனியா, டிச. 28

கல்வி, திட்டமிடல் நிர்வாகப் பிரிவுக்கான இந்திய தேசிய கல்வி நிறுவனம் நடத்தும் இரண்டு வாரப் பயிற்சி நெறியில் கலந்துகொள்ள இலங்கையில் இருந்து 25 பாடசாலை அதிபர்கள் நேற்றுப் புதுடில்லி பயணமானார்கள்.

ஆசிய அபிவிருத்தி வங்கியின் அனுசரணையோடு கல்வியில் திட்டமிடலும் நிர்வாகமும் எவ்வாறு நவீன முறையில் மேற்கொள்ளப்படுகின்றன என்பது குறித்து இலங்கையைச் சேர்ந்த இந்த அதிபர்களுக்கு பயிற்சி வழங்கப்படவுள்ளது.

இதில் பங்கு கொள்வதற்காக 3 தமிழ்ப் பாடசாலை அதிபர்களும் 4 முஸ்லிம் பாடசாலை அதிபர்களும் 18 சிங்களப் பாடசாலை அதிபர்களும் தெரிவு செய்யப்பட்டனர். (இ-10)

# உலக சமஸ்கிருத மாநாடு

பெங்களூர், டிச. 28

பத்தாவது உலக சமஸ்கிருத மாநாடு பெங்களூரில் ஜனவரி 4 ஆம் திகதி ஆரம்பமாகிறது.

26 நாடுகளிலிருந்து சுமார் 200 பிரதிநிதிகளும் இந்தியாவிலிருந்து சுமார் ஆயிரம் சமஸ்கிருத அறிஞர்களும் இந்த மாநாட்டில் கலந்து கொள்வார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது. (இ-10)

# பொங்கல் பரிசாக காவிரி நீர்

பெங்களூர், டிச. 28

காவிரி நதி நீர் பகிர்வு தொடர்பாக கர்நாடக, தமிழ்நாடு முதல்வர்களுக்கிடையே நடைபெறவுள்ள இறுதிச் சுற்றுப் பேச்சு வார்த்தை இரு மாநில விவசாயிகளுக்கு ம பொங்கல் பரிசாக அமையும் என கர்நாடக மாநில நீர்ப்பாசன அமைச்சர் தெரிவித்துள்ளார். (இ-10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காத்தான்குடிப் பகுதியில் 3 மின்மாற்றிகள் தகர்ப்பு

கொழும்பு, டிச. 28

காத்தான்குடிப் பிரதேசத்துக்கு மின்சாரம் வழங்கும் மூன்று முக்கிய மின்மாற்றிகள் (ரான்ஸ்போமர்) சேதமாக்கப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதனால் காத்தான்குடிப் பிரதேசத்தில் மின்சார விநியோகம் பாதிக்கப்பட்டுள்ளது.

இந்த மின் மாற்றிகளும், மின்கம்பங்களும் கடந்த மூன்று மாத காலத்தில் ஆறு தடவைகள் விடுதலைப் புலிகளினால் தகர்க்கப்பட்டிருப்பதாகவும்—

இவற்றைத் திருத்த ஏற்கனவே ஆறு கோடி ரூபா செலவானதாகவும் — மின்சார பொறியியலாளர் ஒருவர் தெரிவித்தார். (இ-5)


## யா/ஸ்கந்தவரோதயக் கல்லூரி,
**சுன்னாகம்.**

பிரவேசப் பரீட்சை

ஆண்டு - 6 1997

**காலம்:** 30-12-1996 திங்கள்
முற்பகல் 9-00 மணி (பழைய நேரம்)
**இடம்** கல்லூரி மண்டபம்
**பாடங்கள்:** தமிழ், கணிதம்

ஆ. கமலநாதன்
அதிபர்

கந்தரோடை,
சுன்னாகம். (சி/3807)



## மக்சல் கவுஸ்
## MAXAAL HOUSE

8-12-96, 15-12-96 இல் எம்மிடம் ஒப்படைக்கப்பட்ட வர்ணப்படச் சுருள்கள் (Nine Hearts) பிரதியாக்கம் செய்யப்பட்டுள்ளன. உரியவர்கள் பெற்றுக் கொள்ளவும். சகல மணிக்கூட்டு பற்றறிகளும் எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம்.

**20, யுபிலி பஜார்,**
**யாழ்ப்பாணம்.**
(சீமாட்டிக்கு அருகில்) (9126)



## PERSONAL CLASSES
25, Racca Road, Jaffna.
(புனித ஜோண் பொஸ்கோ முன்பாக)

## A/L 99

"கலை, வர்த்தகத்துக்குத் தனித்துவமான ஒரே நிறுவனம்"

| | | |
|---|---|---|
| பொருளியல் | — | திரு. விக்கி |
| வர்த்தகம் | — | முன்னணி ஆசிரியர் |
| கணக்கியல் | — | திரு. சுதர்ஷன் |
| புள்ளிவிவரவியல் | — | திரு. தவசேகர் |
| அளவையியல் | — | திரு. கஜன் |
| புவியியல் | — | திரு. இக்னேசியஸ் |
| தமிழ் | — | திரு. திருஞானம் |

**ஆரம்பம்: 30-12-96** முற்பகல் 9 மணி

**A/L 96 Day Classes**

ஆரம்பம்: 30-12-96 முற்பகல் 9 மணி

(44373)



## திரு ரியூசன் சென்ரர்
ஸ்ரேசன் றோட், கோண்டாவில்.

## A/L 99
## கலை, வர்த்தக வகுப்புகள்

| | | |
|---|---|---|
| பொருளியல் | — | சண் |
| கணக்கியல் | — | கொலின்ஸ், சிவா |
| வர்த்தகம் | — | பிரபல ஆசிரியர் |
| புள்ளிவிபரவியல் | — | ஸ்ரனி |
| இந்துநாகரிகம் | ] | சிவ மகாலிங்கம் |
| இந்துசமயம் | | |
| தமிழ் | — | ஆர்த்திகன் |
| அளவையியல் | — | சயந்தன் |
| புவியியல் | — | வேலா |
| நாடகம் | — | சத்தியா |
| அரசியல் | — | இளங்கோ |
| வரலாறு | — | பிரபல ஆசிரியர் |

**ஆரம்பம்: இன்று 28 - 12 - 96**
சனி **8-00** மணி.

[44366]


# திருமலை மத்திய சந்தைக் குத்தகை: ரத்துச்செய்ய பிரிகேடியர் உத்தரவு

## பெரும்பான்மை இனத்தவருக்கு கிடையாததே காரணமாம்

திருகோணமலை, டிச. 28

கேள்விப் பத்திரங்கள் கோரப்பட்டதன் அடிப்படையில் திருகோணமலை நகர சபையினால் வழங்கப்பட்ட மத்திய சந்தைக்கான குத்தகை ஒப்பந்தத்தை ரத்துச் செய்யுமாறு திருகோணமலை இராணுவ இணைப்பதிகாரி பிரிகேடியர் குலதுங்க கடந்த வியாழனன்று நகர சபைத் தலைவர் பி. சூரியமூர்த்திக்கு உத்தரவிட்டுள்ளார்.

தனது பணிமனைக்கு சூரியமூர்த்தியை அழைத்துப் பேசிய பிரிகேடியர் குலதுங்க அவசரகாலச் சட்டத்தின் கீழ் தனக்கிருக்கும் அதிகாரத்தைப் பயன்படுத்தியே இந்த உத்தரவைப் பிறப்பித்ததாகத் தெரிவித்ததுடன் உத்தரவுக் கடிதத்தையும் அவரிடம் கையளித்தார்.

ஆனால் அக் கடிதத்தை கையேற்க மறுத்த சத்தியமூர்த்தி அதைத் தனக்கு முறைப்படி அனுப்பிவைக்குமாறு பிரிக்கேடியருக்குத் தெரிவித்ததாகத் தெரியவருகிறது.

மத்திய சந்தைக்கான குத்தகையை பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்த ஒருவருக்கு வழங்காத காரணத்தினாலேயே அந்த ஒப்பந்தத்தை ரத்துச் செய்யுமாறு உத்தரவிடுவதாகக் கருத வேண்டியிருக்கிறது எனக் குறிப்பிட்ட நகரசபைத் தலைவர் இவ்வாறான முறைகேடு மிக்கதும் இனவாதத் தன்மை கொண்டதுமான தலையீடுகள் காரணமாக நகரசபை நிர்வாகத்தை ஒழுங்காகத் தன்னால் நடத்த இயலாத சூழ்நிலை உருவாகுவதாகவும் விசனம் தெரிவித்தார்.

குத்தகையை ரத்துச் செய்துவிட்டு மேற்படி சந்தைக்கான வரிவசூலை நகர சபையே மேற்கொள்ளவேண்டும் என பிரிகேடியர் தெரிவித்தபோது, அதே சந்தையின் மறுபகுதியில் வரிவசூலிக்கச் சென்ற நகரசபை ஊழியர்கள் கடந்த ஒரு வாரத்திற்கு முன்னர் அங்குள்ளவர்களால் தடுத்து வைக்கப்பட்டது தொடர்பாக தாம் செய்த முறைப்பாடு தொடர்பாக திருகோணமலைப் பொலீஸார் இதுவரை நடவடிக்கை எதுவும் மேற்கொள்ளவில்லை என்று நகர சபைத் தலைவர் தெரிவித்தார். (இ-10)

## யுத்தத்தை...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இங்கு அரசியல் அவதானிகள் ஊகங்களை வெளியிட்டனர்.

போரை முடிவுக்குக் கொண்டுவர வேண்டும் என்று இலங்கை அரசுக்கு சர்வதேச மட்டத்தில் அழுத்தங்கள் அதிகரித்து வருகின்றன.

இலங்கையில் குறிப்பாக வடக்கு - கிழக்கு மாகாணத்தில் நடைபெற்று வரும் மனித உரிமை மீறல்கள் மற்றும் சரிந்து வரும் பொருளாதார நிலைமைகள் என்பவற்றால் போரை எப்படியாவது முடிவுக்குக் கொண்டு வர வேண்டும் என்ற நெருக்குதலும் இலங்கை அரசுக்கு உண்டு —

அதனாலேயே, போரை முடிவுக்குக் கொண்டு வருவதற்கு இந்தியாவின் உதவியை நாடும் நிலைக்குச் சந்திரிகா தள்ளப்பட்டார்— என்றும் அவதானிகள் இங்கு கருத்து வெளியிட்டனர்.

இப்போது ராஜஸ்தான் மாநிலத்தில் விடுமுறையைக் கழித்து வரும் ஜனாதிபதி சந்திரிகா அடுத்த வார ஆரம்பத்தில் புதுடில்லி வருவார்.

அப்போது இந்தியப் பிரதமரைச் சந்தித்துப் பேசுவார். பிரதமர் தேவகௌடா இலங்கை ஜனாதிபதிக்கு பகல் போசன விருந்தளித்துக் கௌரவிப்பார்.

அதே தினத்தில் இந்திய வெளிவிவகார அமைச்சர் இந்திரகுமார் குஜ்ரால் ஜனாதிபதிக்கு இரவு விருந்தளித்துக் கௌரவிப்பார்.

இந்திய - இலங்கை உறவுகள் சீராக உச்ச நிலையில் இருப்பதையே ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் இந்திய விஜயம் எடுத்துக் காட்டுகிறது—என்று வெளியுறவு அமைச்சின் சிரேஷ்ட அதிகாரி ஒருவர் கருத்துத் தெரிவித்தார்.

பங்களாதேஷ் பிரதமர் இந்தியாவுக்கு வந்திருந்ததையும் அந்த அதிகாரி ஒப்பிட்டுக் கருத்து வெளியிட்டார். (அ-3-150)

# மரண அறிவித்தல்கள்

## அம்பலவாணர் சிதம்பரப்பிள்ளை
(ஒலுமடு)

தொல்புரம், சுழிபுரத்தைச் சேர்ந்த அம்பலவாணர் சிதம்பரப்பிள்ளை 24-12-96 செவ்வாய்க்கிழமை ஒலுமடுவில் காலமானார்.

அன்னார் சரஸ்வதியின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற அம்பலவாணர் - தெய்வானைப்பிள்ளை தம்பதியரின் மகனும் காலஞ்சென்ற மயில்வாகனம் - சின்னாச்சிப்பிள்ளை தம்பதியரின் மருமகனும், சுந்தரமூர்த்தி (ஒலுமடு), சத்தியமூர்த்தி (ஜேர்மனி), கிருஷ்ணமூர்த்தி (ஜேர்மனி), பத்மா, கணேசமூர்த்தி (ஜேர்மனி), உமா, சச்சிதானந்தன் (ஜேர்மனி) ரேவதி [டென்மார்க்], கந்தநாதன் (நோர்வே), விஜயகாந்தன் (சுவிஸ்), சிறீகாந்தன் (சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும் சிறீராம் (பொறியியலாளர், லங்கா சிமெந்துக் கூட்டுத்தாபனம், காங்கேசன்துறை), வேலுப்பிள்ளை (புள்ளிவிவர ஆய்வு உத்தியோகத்தர், கச்சேரி, யாழ்ப்பாணம்), தில்லைவாசன் (டென்மார்க்). நிரஞ்சனா (ஒலுமடு), குமாரி (ஜேர்மனி), இன்பராணி (ஜேர்மனி), ஜெயந்தினி (ஜேர்மனி), சிறீரஞ்சனி (நோர்வே), ஜெயகௌரி (சுவிஸ்), சிவரஞ்சி (சுவிஸ்) ஆகியோரின் மாமனாரும் சின்னத்தம்பி (மலேசியா), பொன்னாச்சி கந்தசாமி (கனடா), காலஞ்சென்ற சின்னாச்சிப்பிள்ளை வெற்றிவேல், இலட்சுமியார் வேலாயுதபிள்ளை (ஓய்வுபெற்ற ஆசிரியர்) ஆகியோரின் சகோதரனும், வேலாயுதபிள்ளை (ஓய்வுபெற்ற ஆசிரியர்), சுப்பிரமணியம், நடராசா, இராசம்மா அம்பலவாணர், பாக்கியம் பொன்னுத்துரை, வைத்திலிங்கம் ஆகியோரின் அன்பு மைத்துனரும், ராகவராம், ராகினி, ஜனார்த்தனன், ராஜாராம், வினோத்தனன், நிரஞ்சன், நிருஜன், கிருஷா, சாந்தனன், டினேஸ், நிரோஷா, நிமலினி, சுபானுஜா, லிலோனியா, சிந்துஜா, கஜனி, விதுசன், கௌதமன், கஜனியா, இந்துசன் ஆகியோரின் அருமைப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் ஒலுமடுவில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
க. வேலுப்பிள்ளை (வத்தளை)
(மருமகன்)
விக்ரோறியாக் கல்லூரி அருகில்,
தொல்புரம், சுழிபுரம். (9127)

## அப்புத்துரை வில்வராஜா (ராசன்)

வேலணை கிழக்கைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், யாழ்ப்பாணம் கொட்டடியை வசிப்பிடமாகக் கொண்டவருமாகிய அப்புத்துரை வில்வராஜா (ராசன்) 16-12-1996 அன்று சுவிற்சலாந்தில் காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற அப்புத்துரை மற்றும் பூபதியின் மகனும், வீரலெட்சுமியின் அன்புக் கணவரும், விஜிதா, வினோஜா ஆகியோரின் பாசமிகு தந்தையும், காலஞ்சென்ற நடராசா (மரக் கூட்டுத்தாபன ஒப்பந்தகாரர்) மற்றும் திலகவதி ஆகியோரின் மருமகனும், காலஞ்சென்ற அம்பிகைராஜா மற்றும் ஆனந்தராஜா (சுவிஸ்), வினோதராஜா (சுவிஸ்), உருத்திராதேவி, திருத்தேவி, லீலாதேவி ஆகியோரின் சகோதரரும், திருமதி பரம்சோதி கிருஸ்ணாம்பிகை, திருமதி தெய்வேந்திரம் ராசேஸ்வரி, திருமதி சிவபாதசுந்தரம் விஜயலெட்சுமி (பிரான்ஸ்), திருமதி அருள்ராஜா பத்மாவதி (பிரான்ஸ்), சரவணபவான், ராஜகோபால் (பாலன்—பிரான்ஸ்), அருள்நந்தி (கனடா) ராஜேந்திரன் (கனடா), நித்தியானந்தன் (கனடா) ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 30-12-1996 இல் சுவிற்சலாந்தில் நடைபெறும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் தயவு செய்து ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
மு. பரம்சோதி
(சகலன்)
பலாலி வீதி,
கந்தர்மடம்,
யாழ்ப்பாணம். (44369)

மேலும் மரண அறிவித்தல்கள் 2 ஆம் பக்கத்தில்

இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிக்கேசன் (பிறைவேற்) லிமிடெட்டினரால் யாழ்ப்பாணம், நாவலர் வீதி, 292/2இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 28 - 12 - 1996 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org